www.tamilarangam.net

# கதிர்



## விடுதலைப்புலிகள் ஈரோசுக்கும் தடை !



## பாலைவனத்தில் போர் மேகங்கள்.



அரசியல் இதழ்:03
25 ஒக்ரோபர் 1990
அன்பளிப்பு 5,-DM

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதிர்

"மெல்லெனப் பாயும் ஓடை
கல்லையும் உருட்டிப் பாயும்."

25 ஒக்ரோபர் 1990

அரசியல் இதழ்:03

அன்பளிப்பு :5,-DM

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இறுதித் தீர்வு எதுவென கண்டுபிடிக்க இன்றைய ஜனாதிபதி களத்தில் இறங்கியிருக்கிறார். வட-கிழக்கு இணைப்பு தேவையா? தேவையில்லையா? முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழவிரும்புகிறார்களா? இல்லையா? இனப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க சமஷ்டி உதவுமா? மாகாணசபை போதுமா? இப்படிப் பல கேள்விகளை அனைத்துக் கட்சிகளிடமும் ஜனாதிபதி ஒரு கேள்விக்கொத்தின் மூலம் கேட்டிருந்தார். அனைத்து கட்சிகளினதும் கருத்துக்களை திரட்டி ஏகமனதாக ஒரு தீர்வு ஏற்படுவதையே தமது அரசாங்கம் விரும்புவதாக குறிப்பிட்டு அதற்காகவே இந்த ஏற்பாடு எனவும் சொல்லப்பட்டுள்ளது.

30 வருட அரசியல் அனுபவம் கொண்ட இன்றைய ஜனாதிபதிக்கு இந்த கேள்விகளுக்கு பதில் தெரியாததல்ல. 60 வருட அரசியல் அனுபவம் பெற்ற முன்னைய ஜனதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தனது இளைப்பாறும் காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சனை என்று தனக்கு விளங்கவில்லை என கூறியது போல்இன்றைய ஜனாதிபதியும் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் இலங்கைமீதான இன்றைய நிலைப்பாட்டாலேயே இன்றைய ஜனாதிபதிக்கு இனப்பிரச்சனையை தீர்த்து வைப்பதற்கு ஆராய்ச்சி செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தியா அதிகரித்துவரும் அகதிகள் தொகையைவைத்து இலங்கை பிரச்சனையில் வருத்தம் கொண்டுள்ளதாக எப்போதும்போல் இப்போதும் மறைபொருளாக கூறியிருக்கிறது.

இதனால் வடபகுதியில் வரையறுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை மட்டும் மேற்கொண்டு இந்தியத் தலையீட்டிற்கு வாய்பில்லாத முறையில் உத்திகளைக் கையாள இலங்கை அரசு தொடங்கியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் புதிய மாகாண எல்லை வரையறுப்புக்களை செய்து தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டவும் காலப்போக்கில் வட-கிழக்கு இணைப்பை இல்லாதொழிக்கவும் தயாராகி வருகிறது.

இலங்கை ஜனாதிபதியின் உள்நோக்கம் ஒரு புறமும், பேச்சு மறுபுறமுமான இந்த போக்கு இனப்பிரச்சனைக்கு தீர்வை தந்து விடும் அறிகுறிக்குரியதல்ல. இலங்கையின் இறைமைக்கு அச்சுறுத்தலாய் மாறிப் போயுள்ள இனப்பிரச்சனையை என்ன என்று தெரியாதது போல் கேள்வி எழுப்புவது வெறும் பாசாங்கே. இது காலத்தை கடத்தும் ஒரு காரியமே.

இவ்வேளையில் இனப்பிரச்சனைக்கான தீர்வை எதிர்க்கட்சிகள் குறிப்பாக தமிழ்க் கட்சிகள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டு ஆளுக்கொரு தீர்வை முன்வைத்துள்ளனர். இது எதிரிக்கு துணைபோகும் காரியமே. தமிழ் இயக்கங்களின் நடைமுறை அணுகுமுறைகள் வேறுபட்டு இருந்தாலும் அரசியல் கோரிக்கை ஒன்றுபட்டிருத்தல் கட்டாயமே. இன்று தமிழ் கட்சிகளிடையே ஏகமனதான ஓர் இடைக்காலக் கோரிக்கை ஏற்பட வேண்டியது அவசியமே.

புகைப்படங்கள்:

திரு.கே.கஜேந்திரன்
திரு.ஜே.கேசவன்
*TIME* சஞ்சிகை.

முகவரி:

KATHIR
POSTFACH 61 04 94
1000 BERLIN 61
GERMANY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வட-கிழக்கில் மோதலைத் தொடர

# தயங்குகிறது இலங்கை அரசு

### இலங்கை அரசு சந்தித்துவரும் புதிய நெருக்கடிகள்

வட-கிழக்கில் சுமார் நான்கு மாதங்களாக இடைவிடாது ஏற்பட்டு வந்த மோதல்கள் தற்போது வேகம் தணிந்து காணப்படுகின்றன. இலங்கை அரசு தனது இராணுவ நடவடிக்கைகளை யாழ்குடா நாட்டில் மட்டுப்படுத்தும் முடிவுக்கு வந்துள்ளது.

மோதல்கள் ஆரம்பமானது முதல் சுமார் இரண்டு மாத காலங்களில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் இராணுவத்தின் பிடிக்குள் வந்திருந்தன. வடமாகாணத்தில் அதற்கான கேந்திர ஸ்தானமாக விளங்கும் வவுனியாவை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தது.

கடந்த யூன் மாதத்தில் மோதல்கள் ஆரம்பமாகிய சில நாட்களில் கூட்டப்பட்ட இலங்கை அரசின் பாதுகாப்புச் சபைக் கூட்டமானது இந்தியத் தலையீட்டுக்கு மீண்டும் வழிவகுக்காத முறையில் இராணுவ நடவடிக்கைகள், விஸ்தரிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென தீர்மானம் இயற்றி இருந்தது. யாழ்ப்பாணத்தில் யுத்த சூனியப் பிரதேசம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் இந்தியத் தலையீட்டைத் தடுக்கவும், விடுதலைப் புலிகளுடன் மோதலையும், பேச்சுவார்த்தையையும் ஏககாலத்தில் பேணவும் முடியும் என்பதே இலங்கைத் தரப்பினரின் இராணுவ உபாயமாக அமையப் பெற்றிருந்தது.

இந்த முடிவுகளைப் பெற்றிருந்த சில வாரங்களின் பின் இந்திய மத்திய அரசில் ஏற்பட்டிருந்த நெருக்கடிகளும், இலங்கை தொடர்பாக இந்திய அரசு முடிவுகள் எதனையும் எடுக்காத நிலையிலும் குடாநாடு முழுவதற்குமான இராணுவ நடவடிக்கைகளுக்கு இராணுவ அதிகாரிகள் தயாராகினர். யாழ் கோட்டை, மண்டைதீவு, அல்லைப்பிட்டி, ஊர்காவற்துறை, காரைநகர் முதலான நிலைகளில் இராணுவ முகாம்களை விஸ்தரித்து தீவுப் பகுதி முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தனர். 87ல் மேற்கொள்ளப்பட்ட "ஒப்பறேசன் லிபறேசன்" என்னும் இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சியாகவே இதனை வர்ணித்தனர்.

விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறிய இராணுவ நடவடிக்கைகள் தமிழ் மக்கள் மீதான சிங்கள எதேச்சதிகாரத்தின் வெறிதீர்க்கும் போராக மேலெழுந்தன. இதனால் அச்சமடைந்த தமிழ் மக்கள் இந்தியாவிற்கு நாள் ஒன்றிற்கு 2000-3000 வரையில் அகதிகளாக இடம் பெயர்ந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பல நெருக்கடிகளை இலங்கை அரசு சந்திக்கத் தொடங்கியிருந்தது.

அதிகரித்து வரும் அகதிகள் தொகையானது இந்தியாவிற்கு மீண்டும் இலங்கை விவகாரத்தில் தலையிடக்கூடிய அதிகாரத்தைப் படிப்படியாக வழங்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி வந்தது. 87 போல் மீண்டும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சம் இலங்கை அரசியல் வட்டாரங்களில் ஏற்படத் தொடங்கி யிருந்தது.

மற்றைய நெருக்கடியாக வளைகுடா பதற்றம் அமையப் பெற்றுள்ளது. இதனால் சுமார் ஒரு இலட்சம் பேர் தொழில் வாய்ப்பை இழந்து போக தேசிய வருமானத்தில் மூன்றாவது இடத்தை வகித்து வந்த வருவாய்த்துறை வீழ்ச்சி அடைந்தது. தேயிலை விற்பனையில் பெரும்பான்மை அளவில் கொள்வனவு செய்யும் ஈராக்குடனான சகல தொடர்புகளும் தடைப்பட்டன. மேலும் எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படத்தொடங்கியது. இது இலங்கை அரசுக்கு எதிர்பாராத பாரிய பொருளாதார நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

இவற்றைவிட இராணுவ நடவடிக்கைகளை தொடர்வதனால் அதிகரித்து வரும் இராணுவச் செலவினங்களைக் கண்டு ஏற்கனவே பொருளாதார உதவிகளை வழங்கி வந்த ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து நிதி உதவி வழங்கத் தயக்கம் காட்டின.

இலங்கை அரசை மேற்படி நெருக்கடிகள் சூழத் தொடங்கியதும் இராணுவத்தின் வேகத்தைத் தணிக்க ஜனாதிபதி பிரேமதாசா முற்படலானார். மீண்டும் யுத்த சூனியப் பிரதேசம் பற்றிய பேச்சுக்கள் மேலெழுந்தன. யாழ் கோட்டை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களில் நிலைகொண்டிருந்த இராணுவம் அகன்றது. சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் யாழ் வைத்தியசாலையையும், அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் ஒப்படைத்து மோதலற்ற பிரதேசமாக ஆக்கும் காரியங்களில் இறங்கி யிருந்தது.

### இலங்கை விவகாரத்தில் இந்தியா பெற்றுள்ள சில தீர்மானங்கள்

இலங்கை விவகாரம் தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாடுகள் பற்றி புதுடெல்கி தற்காலிகமான சில முடிவுகளை மேற்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டுள்ளது. இந்திய இராணுவம் சுமார் இரண்டரை வருடங்களாக மேற்கொண்ட நடவடிக்கைகளையே தற்போது இலங்கை இராணுவம் தொடர்வதாக இன்றைய நிலையை புதுடெல்கி அதிகாரிகள் சித்தரித்துள்ளனர்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை விடுதலைப்புலிகள் அங்கீகரிக்கும் எழுத்து மூலமான இணக்கப்பாடு ஒன்றுக்கு வந்தால் மட்டுமே விடுதலைப் புலிகளுடன் உத்தியோக பூர்வமான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகளே தென்படுகின்றன.

ஆயினும் தமிழ்நாடு முதல்வர் மு.கருணாநிதி மத்திய அரசின் இப்போக்கின் மீது அதிருப்தி யுற்றவராகவே காணப்படுகிறார். இவர் விடுதலைப் புலிகளின் பேச்சாளர்களை அழைத்து 87ற்கு முன்னர் போல் உத்தியோகபூர்வமாக பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென்பதில் நாட்டமுடையவராகவுள்ளார்.

மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு வந்து குவிந்துள்ள சுமார் ஒன்றரை இலட்சம் தமிழ் அகதிகளைப் பயன்படுத்தி இலங்கை அரசுடன் தனது நலிந்து போயுள்ள உறவுகளை வலுப்படுத்தத் தீர்மானித்துள்ளது. இராணுவ ரீதியான எத்தகைய தலையீடுகளும் மேற்கொள்ளப் படமாட்டாது என்ற உறுதி மொழி இலங்கை அரசுக்கு வழங்கப் பட்டுள்ளது.

மேலும் இலங்கையின் வடபகுதியில் ஒரு நிலப்பரப்பில் இந்தியாவின் நேரடிக் கண் காணிப்பின் கீழ் அமைந்த ஒரு அகதி முகாமை உருவாக்குவதன் மூலம் இலங்கை விவகாரத்தில் தனது தேவையை உறுதிப்படுத்த விரும்புகிறது. இதற்காக இலங்கையுடன் நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசை சம்மதிக்க வைத்துள்ளது. இதை எப்போது நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி இந்தியாவே இறுதி முடிவு செய்யும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

## எதிர்க்கட்சிகளுக்கு தரிப்பிடமளித்த சர்வகட்சி மாநாடு

வடகிழக்கில் மோதல்களை நிகழ்த்தி வந்த இலங்கை அரசு அதற்குச் சமாந்தரமாக சர்வகட்சி மாநாட்டை பயன்படுத்தி இனப்பிரச்சனைக்கான தீர்வுபற்றி விவாதித்திருந்தது.

இலங்கை அரசின் இந்த ஏற்பாடானது எதிர்க்கட்சிகளுக்கும்; பல விடுதலை இயக்கங்களுக்கும் ஒரு தரிப்பிடமாக அமையப் பெற்றிருந்தது. ஒவ்வொரு கட்சிகளிடமும், இயக்கங்களிடமும் இனப்பிரச்சினை தொடர்பாக அவர்கள் முன்வைக்கும் தீர்வுகள் பற்றி பிரஸ்தாபிக்கும் படி கேட்கப்பட்டிருந்தது.

லிபரல் கட்சியும், மக்கள் ஐக்கிய முன்னணியும், எக்சத் லங்கா ஜனதாக் கட்சியும் மாகாண சபை அடிப்படையிலான அதிகாரப்பரவலாக்கம் ஒன்றைச் செய்வதன் மூலம் இனப்பிரச்சனையைத் தீர்வுக்கு கொண்டு வரவேண்டுமென வலியுறுத்தியுள்ளன. மாகாணசபை எல்லைக்குட்பட்ட சுயாட்சி அதிகாரங்கள் வழங்குவது பற்றி இவை வலியுறுத்தியுள்ளன. ஆயினும் புதிய மாகாண எல்லை வரையறை செய்யப்பட வேண்டும் என்பதை இவர்கள் மறைமுகமாகச் சுட்டிக்காட்டியுள்ளன.

தமிழர் அமைப்புக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய அரசியற் சாசனம் வரைய வேண்டுமெனக் கூறியுள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எப். இந்திய மத்திய மாநில அரசுகளுக்கு இருக்கும் அதிகாரங்கள் போல இலங்கை மத்திய மாநில பீடங்களின் அதிகாரங்கள் அமையப் பெற்று தீர்வு காணப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) சுவிஸ் நாட்டில் உள்ளது போல கன்டோன் அமைப்பு முறை ஒன்றே உகந்தது எனக் கூறியுள்ளது. தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) சோசலிச சமஷ்டி முறை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறியுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தற்போதைய மாகாண சபைக்குக் கீழ்ப்பட்டதாக பிரதேச சபைகளை உருவாக்குவதன் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்த்து விடலாம் என்றது. அகில இலங்கை முஸ்லிம் லீக் தற்போதைய மாகாண சபைகளின் முதலமைச்சர்களுக்கும், அவர்களது அமைச்சரவைகளுக்கும் நிறைவேற்று அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்பட வேண்டுமென கருத்து வெளியிட்டுள்ளது. இதே கருத்தையே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கூறியுள்ளதுடன் முஸ்லிம்களுக்கான மாகாணசபை உருவாக்கப்பட வேண்டுமெனக் கோரியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியும், ஈரோஸ் இயக்கத்தின் ஈழவர் ஜனநாயக முன்னணியும் இனப்பிரச்சனைக்கான தீர்வு குறித்து எந்த விதமான கருத்துக்களையும் சர்வகட்சி மாநாட்டில் முன்வைத்திருக்கவில்லை.

விடுதலை இயக்கங்களும் தென்பகுதிக் கட்சிகளும் முன்வைத்த யோசனைகளை ஒன்று திரட்டிக் கொண்ட இலங்கை அரசு வடமாகாணத்தையும், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களையும் ஒன்றிணைத்த பிரதேசத்தில் சமஷ்டி முறை ஒன்றையும் அம்பாறையில் முஸ்லிம்களுக்கான புதிய மாகாண சபை ஒன்றையும் உருவாக்குவது பற்றி விவாதம் நடாத்தியுள்ளது.

சுமார் இரண்டு மாதங்களாக தீர்வு பற்றி விவாதித்து வந்த பின்னர் கட்சிகளினதும், இயக்கங்களினதும் உறுப்பினர்களைச் சந்தித்த அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீட் எந்தத் தீர்வும் விடுதலைப் புலிகளுடனான இணக்கத்தின் பின்னரே சாத்தியமாகும் எனக் கூறியிருந்தார்.

விடுதலைப் புலிகளினுடைய கோரிக்கையானது தாமே வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய இராணுவ சக்தி என்பதை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதாகும். தம்மை தேசிய சக்தியாக அனைவரும் அங்கீகரித்து செயற்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் கூறி வருவதன் உள்ளடக்கமும் இதுவேயாகும்.

விடுதலைப் புலிகளின் அகராதியில் ஒரு தேசிய இயக்கம் என்பதன் அர்த்தம் என்ன என்பதை அவர்களுடன் நீண்ட காலமாக ஒத்துழைத்து வந்த ஈரோஸ் இயக்கம் தொடர்பாக அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொண்டுள்ள முடிவிலிருந்து தெரிந்து கொள்ள முடியும்.

## விடுதலைப்புலிகள் ஈரோஸ் உறவு

விடுதலைப் புலிகளை முதன்மையான தேசிய சக்தியாக ஈரோஸ் இயக்கம்மட்டுமே பகிரங்கமாக அறிவித்துச் செயற்பட்டு வந்தது. 1986ம் ஆண்டு பெங்களூர் பேச்சுவார்த்தையின் போது இந்திய அரசு தமிழர் விடுதலைக் கூட்டணிக்குப் பதிலாக விடுதலைப் புலிகளைமுதன்மை சக்தியாக முன்வைத்து இடைக்கால தீர்வு ஒன்றைக் காண முயற்சித்த போது ஈரோஸ் இயக்கம் இந் நிலைப்பாட்டை மேற்கொண்டிருந்தது. இது விடுதலைப் புலிகளுக்கும் ஈரோசுக்குமிடையே ஓர் ஒத்துழைப்புக்கான சமிக்ஞையாக விளங்கியிருந்தது.

இதற்கு முன்னர் 1976ல் ஈரோஸ் இயக்கமும் விடுதலைப் புலிகளும் தமது இயக்க உறுப்பினர்களுக்கான இராணுவப் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த வேளைகளில் ஈரோஸ் இயக்கத்தினால் வெளிநாட்டில் மேற்கொள்ளப் பட்டு வந்த இராணுவப் பயிற்சி வசதிகளை புலிகளுக்கும் கொடுத்து உதவ இணக்கம் காணப்பட்டிருந்தது. இதன்படி விடுதலைப் புலிகள் இருவரை ஈரோஸின் வெளிநாட்டுப் பயிற்சி ஏற்பாட்டுக்கு வழங்கியிருந்தது. உமா மகேஸ்வரன், விச்சுவேஸ்வரன் ஆகிய இருவருமே அனுப்பி வைக்கப்பட்டவராவார்கள். இவ்விருவரும் பயிற்சிகளை முடித்து நாடு திரும்பிய பின்னர் விடுதலைப் புலிகள் ஈரோசுடனான உறவைத்துண்டித்துக்கொண்டது.

1976 இல் ஏற்பட்ட இணக்கப்பாட்டுக்குப் பின் 1986 யிலேயே விடுதலைப் புலிகளுக்கும் ஈரோசுக்குமிடையே இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டிருந்தது. அதன் பின் கிழக்கு மாகாணத்திலும், "ஒப்பரேசன் லிபரேசன்" நடைபெற்ற போது குடாநாட்டிலும் இராணுவ ரீதியிலான ஒத்துழைப்புடன் ஈரோசும் விடுதலைப் புலிகளும் இயங்கி வந்தன.



## ஈரோஸ்–புலிகள் உறவில் மூன்று விரிசல்கள்!

இந்திய இராணுவம் இலங்கை வந்ததும் இந்திய இராணுவத்தின் பாதுகாப்பின் கீழ் நிறுவ இருந்த இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் ஏற்றுச் செயற்பட முடிவு செய்திருந்தனர். மாற்று இயக்கங்கள் எதனுடனும் தாம் கூட்டிணைந்து நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள அறவே மறுத்த விடுதலைப் புலிகள் ஈரோஸ் இயக்கத்தை மட்டும் இணைத்துக் கொள்ள முன்வந்தது.

இச் சமயத்தில் இவ் இடைக்கால நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ள ஈரோஸ் மறுத்துவிட்டது. மலையக மக்களை புறக்கணிக்கும் எத்தகைய தீர்வையும் தம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது என அறிக்கைவிடுத்திருந்தது. மேலும் இடைக்கல நிர்வாகம் என்பது இயக்கங்களுக்கிடையிலான போட்டா போட்டிக்கும் களம் அமைத்துக் கொடுத்திருப்பதனால் தம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது எனக் கூறியிருந்தது. இதுவே ஈரோசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான உறவில் குறிப்பிடத்தக்க முதலாவது விரிசலாக அமையப் பெற்றிருந்தது.

இடைக்கால நிர்வாகத்தை தோற்றுவிப்பதில் ஏற்பட்ட இழுபறிகளால் மீண்டும் வன்முறைகள் தலைதூக்கிய நிலையில் விடுதலைப் புலிகள் வசமிருந்த ஆயுதங்களைக் களைய இந்திய இராணுவம் முற்பட்ட போது விடுதலைப் புலிகள் தமது தலைமைத்துவத்தை தற்காத்துக்கொள்வதற்காக மோதல்களில் இறங்கியிருந்தனர்.

இம்மோதலை துரதிஷ்டவசமானது என வர்ணித்த ஈரோஸ் இந்திய இராணுவமும், விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்தம் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி வந்தது. இதற்காக வட-கிழக்கு எங்கனும் யுத்த நிறுத்தம் கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் நடத்தியிருந்தது. அதேவேளை இந்திய இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தக் கோரியபோது அதனை ஈரோஸ் மறுத்திருந்தது. இந்திய இராணுவத்திற்கு எதிரான செயற்பாடுகளில் ஈரோஸிற்கும் விடுதலைப்புலிளுக்கும் இடையிலான நடைமுறை வேறுபாடு இவ்விரு இயக்கங்களுக்கும் இடையிலான இரண்டாவது விரிசலாகும்.

இந்திய இராணுவத்தின் பாதுகாப்புடனும், மோதல்கள் ஆங்காங்கே நிலவிய நிலையிலும் மாகாண சபை தீர்வை இலங்கை, இந்திய அரசுகள் முன்வைத்த போது இடைக்கால நிர்வாகத்தைப் போலவே இதனையும் ஈரோஸ் ஏற்றிருக்கவில்லை. மாகாண சபைத் தேர்தலை ஈரோஸ் பகிஷ்கரித்தது. ஆயினும் இத்தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியை ஏற்படுத்திய விடுதலை இயக்கங்கள் ஈரோஸ் இயக்கத்தை விடுதலைப் புலிகளின் சகாவாக குற்றம் சாட்டி அழித்தொழிக்க முற்பட்டன. ஈரோஸ் தனது தனித்துவத்தை நிலைநாட்டவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டது.

இந்நெருக்கடி நிலையில் பாராளுமன்றத் தேர்தல் பற்றி அறிவிக்கப்பட்டபோது ஈரோஸ் இயக்கம் அத்தேர்தலில் தனது வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. வேட்பாளர்களை நிறுத்துவதற்கு முன் விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற உயர் மட்டப் பேச்சுவார்த்தை வெற்றியளிக்காத நிலையிலும் ஈரோஸ் வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. இது ஈரோசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மூன்றாவது விரிசலாகும்.

ஈரோஸ் நிறுத்திய வேட்பாளர்களை குறிப்பிட்ட திகதிக்கிடையில் வாபஸ் பெற்றுவிட வேண்டுமென விடுதலைப் புலிகள் காலக்கெடு விடுத்திருந்தனர். இரண்டு வேட்பாளர்களைத் தவிர ஏனையோர் வாபஸ் பெற்றிருக்கவில்லை.

விடுதலைப் புலிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரிய நிலையிலும், ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈ.என்.டி.எல்.எப். போன்ற மாகாணசபை இயக்கங்கள் ஈரோஸ் உறுப்பினர்களை தேடி அழித்து வந்த நிலையிலும் ஈரோஸ் தேர்தலில் பெரும்பான்மை வாக்குப் பலம் பெற்று வெற்றியீட்டியது. ஈரோசுக்குக் கிடைத்த இந்த வெற்றியை மாற்று இயக்கங்களாலும், அதன் ஆதரவாளர்களாலும்

www.tamilarangam.net

ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. இயக்க மோதல்களுக்கு வரிந்துகட்டாத ஈரோஸை "எதையும் செய்யாது இலாபம் தேடிய இயக்கமென" வசைபாடினர்.

அதேவேளை தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரியும், வேட்பாளர்களை மிரட்டியும் வந்த விடுதலைப் புலிகள் தமது ஆதரவினாலேயே ஈரோஸ் வெற்றி பெற்றதாகக் கூறத்தொடங்கினர். விடுதலைப் புலிகளின் முன்னுக்குப்பின் முரணான அரசியல் முடிவுகள் அவர்களின் அரசியற் பலவீனத்தை உறுப்பினர்கள் மத்தியில் உறுத்துவதாய் இருந்தது. இதன்பின் பாராளுமன்றப் பிரவேசத்தை ஈரோஸ் மேற்கொண்டதும் விடுதலைப் புலிகள் ஈரோசுக்கு எதிரான பிரச்சாரத்தை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் முடுக்கி விட்டனர். "சந்தர்ப்ப வாதிகள்" என்ற சொற்பிரயோகத்தின் கீழ் ஈரோசுக்கு எதிரான துண்டுப் பிரசுரத்தை விநியோகிக்கத் தொடங்கினர். இப்பிரசுரம் ஈரோஸ் இயக்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஓர் அரசியல் அச்சுறுத்தலாக மாறியிருப்பதை தெளிவுபடுத்தியது.

இவ்விரு இயக்கங்களுக்குமிடையே ஏற்பட்டு வந்த இந்த விரிசல்கள் இந்திய இராணுவம் வெளியேறிய பின் நடைபெற்ற இரு இயக்கங்களின் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளின் போது சுமுக நிலைக்கு வந்திருந்தன. விடுதலைப் புலிகளுடன் உடன்பாட்டு அடிப்படையில் இணைந்து செயற்படும் யோசனையை ஈரோஸ் இயக்கம் தெரிவித்திருந்தது.

ஈரோஸின் பொது ஆணைக்குழு பெற்ற இம் முடிவின் பின் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஈரோஸ் இயக்கம் நெருக்கடியான காலகட்டங்களில் தம்மோடு தோள் கொடுத்து போராடியதெனக் குறிப்பிட்டு அதன் பாராளுமன்றப் பிரதிநித்துவத்தை தாம் ஏற்றுக்கொள்ளுவதாகவும் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

ஆயினும் ஈரோஸ் இயக்கத்துடன் இணைந்து செயற்படுவது குறித்து விடுதலைப் புலிகளின் உயர்மட்டக் குழு உறுப்பினர்கள் கொண்ட கருத்தை அவ்வியக்கத்தின் மத்திய குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளவில்லை. மாற்று இயக்கங்களைத் தடை செய்தது போல ஈரோஸைத் தடை செய்ய வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி நின்றது.

## ஈரோஸை கலைத்துவிடுமாறு விடுதலைப்புலிகள் உத்தரவு !



இலங்கை இராணுவத்துடன் விடுதலைப் புலிகள் மோதத் தொடங்கிய பின் கடந்த ஜூலை மாதத்தில் விடுதலை புலிகள்- ஈரோஸ் உயர்மட்டப் பேச்சுவார்த்தையின் போது ஈரோஸ் தன்னை இராணுவக்கெடுபிடியிலிருந்து தற்காத்துக் கொள்ள தாம் இந்திய இராணுவம் வெளியேறியபோது வழங்கியிருந்த ஆயுதங்களை மீளத் தருமாறு கோரியிருந்தது. இதற்கான பதிலை தெரிவிக்கப் போவதாகக்கூறி ஈரோஸ் நிறைவேற்றுச் செயலாளர் பாலகுமாரனை அழைத்த விடுதலைப்புலிகளின் பேச்சாளர் யோகி ஈரோஸ் இயக்கத்தைக் கலைத்துவிடுமாறும் இவ்வறிவித்தலை ஜூலை மாதம் 15ம் திகதிக்கு முன்னர் விடுக்குமாறும் விடுதலைப் புலிகளுடன் தனித்தனியாக வந்து இணைந்து கொள்ளுமாறும் உத்தரவிட்டார்.

விடுதலைப் புலிகளின் இறுதியான இம்முடிவுகள் தொடர்பாக தமது முடிவுகளை எடுப்பதற்கு ஈரோஸ் இயக்கத்தின் நிறைவேற்றுச் செயலாளர் பாலகுமாரன் பொது ஆணைக்குழு உறுப்பினர்களின் அபிப்பிராயங்களைத் திரட்டியிருந்தார். 30 பேர் கொண்ட இப்பொது ஆணைக்குழுவில் 3 பேர் மட்டுமே ஈரோஸைக் கலைத்து விட்டு தனித்தனியாக விடுதலைப் புலிகளில் சேருவதை ஏற்றிருந்தனர். பொது ஆணைக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் ஈரோஸைக் கலைக்கும் விடுதலைப் புலிகளின் முடிவுக்கு ஆட்சேபணை தெரிவித்துள்ள நிலையில் பாலகுமாரன் தன்னைப் பொறுத்தவரையிலும் இயக்கக் கலைப்பு என்ற முடிவை எடுக்க முடியாது என்ற முடிவைத் தெரிவித்திருந்தார்.

இம் முடிவால் கசப்புற்ற விடுதலைப் புலிகள் யாழ் குடாநாட்டிலிருந்த ஈரோஸின் தொழிற் சாலைகளையும், வைத்திய நிலையங்களையும் விவசாய பண்ணைகளையும் சுவீகரித்தனர். ஈரோஸ் உறுப்பினர்களின் வதிவிடங்களையும் கண்காணித்திருந்தனர். கடந்த ஒகஸ்ட் மாதம் 15ம் திகதி குடாநாட்டுப் பத்திரிகையாளர்களைச் சந்தித்த பாலகுமாரன் தற்போதுள்ள நெருக்கடியான சூழ்நிலையில் குடாநாட்டில் தமது செயற்பாடுகளை இடைநிறுத்துவதாகக் குறிப்பிட்டு இனிமேல் தான் தனிப்பட்ட பாலகுமாரனாகவே சந்திப்பேன் எனவும் கூறியுள்ளார்.

இந்த அறிவிப்பின் பின்பு பாலகுமாரனைச் சந்திக்க முனைந்த வெளிநாட்டுப் பத்திரிகை யாளர்கள் தாம் விடுதலைப் புலிகளால் தடுக்கப் பட்டதாக செய்தி வெளியிட்டுள்ளனர். பாலகுமாரன் விடுதலைப் புலிகளினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலும் இந்தியாவிலும் ஏககாலத்தில் செய்தி வெளியிட்டுள்ளார்கள். தற்போது 30 பேர் கொண்ட பொது ஆணைக்குழுவிலிருந்து 3 பேர் ஈரோஸிலிருந்து விலகி விடுதலைப் புலிகளில் சேர்ந்துள்ளனர். யாழ் மாவட்ட முன்னை நாள் பாராளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் இம் மூவரில் குறிப்பிடப்படத் தக்கவராவர். ஈரோஸ் யாழ்மாவட்ட பொறுப்பாளராக பணியாற்றிவந்த பரராஜசிங்கம் தலைமையில் இரு யாழ் மாவட்ட உறுப்பினர்களும், சில சாதாரண உறுப்பினர்களும் உதிரிகளாக விடுதலைப் புலிகளுடன் இணைந்துள்ளனர்.

ஈரோஸ் இயக்கம் இத்தகைய ஒரு பிரிவை மூன்றாவது முறையாக சந்தித்து இருக்கிறது. 1980 இல் ஈரோஸ் இயக்கத்தின் செயற்பாடுகளை மந்தமானது எனக் குறிப்பிட்டு வேகமான செயற்பாடுகளுக்காக பத்மநாபா தலைமையில் சிலர் உதிர்ந்து சென்று ஈ.பி.ஆர்.எல்.எவ். எனும் இயக்கத்தை 1981 இல் ஆரம்பித்திருந்தனர். இதுவே ஈரோஸ் சந்தித்த முதலாவது பிரிவாகும்.

இதன் பின்னர் 1989 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது மட்டக்களப்பு பொறுப்பாளராக இருந்த குமாரவடிவேல் என்பவர் மாகாணசபையில் ஆட்சி அதிகாரம் பெற்றிருந்த இயக்கங்களின் பின்னணியில் புதிய இயக்கம் ஒன்றை தோற்று வித்திருந்தார். பொதுத் தேர்தலின்போது


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேட்பாளராக நின்ற இவர் மக்களால் நிராகரிக்கப்பட்டிருந்தார். இதுவே ஈரோஸ் சந்தித்த இரண்டாவது பிரிவாகும். தற்போது பரராஜசிங்கம் தலைமையில் பிரிந்து சென்று விடுதலைப் புலிகளுடன் இணைந்த இந்தக் குழு மூன்றாவது நிகழ்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

விடுதலைப் புலிகளை ஒரு தேசிய சக்தியாக அங்கீகரித்து அதனுடன் ஈரோஸ் இயக்கத்தை அதனது சுய அடையாளத்தை இழக்காமல் வரையறுக்கப் பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் இணைத்து போராட்டத்தைத் தொடர முடியுமென நீண்டகாலமாக முயற்சித்து வந்த ஈரோஸ் இயக்கத்தின் தலைமைத்துவத்தின் முன்னெடுப்புக்கள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

ஏனைய இயக்கங்களை தடைசெய்த போது விடுதலைப் புலிகள் குற்றச் சாட்டைச் சுமத்தியது போல் ஈரோஸ் இயக்கத்தின் மீது காத்திரமான குற்றச்சாட்டுக்கள் எதுவும் சுமத்தமுடியாத நிலையில் பாலகுமாரன் ஊடாக ஈரோஸை‌க் கலைத்து விட எடுத்த முயற்சிகளும் பிசுபிசுத்துப் போயுள்ளது.

ஆயினும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் ஏனைய இயக்கங்களை அவர்கள் நோக்குவது போல ஈரோஸ் இயக்கத்தையும் தடை செய்யப் பட்ட இயக்கமாக நோக்கத் தொடங்கியுள்ளனர். தற்போது ஒரேயொரு தேசிய இயக்கமாக விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே இருப்பதாகவும் அவர்கள் பிரகடனம் செய்துள்ளனர். ஆயுதங்களை இழக்காத அரசியல் சமரசம் எதற்கும் விடுதலைப்புலிகள் தயாராகவுள்ளனர் என்பதே இதன் அர்த்தமாகும்.

## அரசு–புலிகள் பேச்சுவார்த்தைக்கு மீண்டும் முயற்சிகள்

விடுதலைப் புலிகளைப் பொறுத் தவரையில் தமிழ் பேசும் மக்களின் இராணுவ சக்தி தாமே என்பதை உறுதிப்படுத்தக் கூடிய தீர்வு எதுவும் கிடைக்காத வரை தமது இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தக்கூடியவர்கள் அல்லர்.

இனப் பிரச்சனைக்காக முன்மொழியப்படும் தீர்வு விடுதலைப் புலிகளின் இராணுவக் கட்டமைப்பை உருக்குலைக்காது பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஒன்றாக இருந்தால் மட்டுமே அதனை ஒரு அரசியற் தீர்வாக விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளமுடியும்.

வட-கிழக்கில் இலங்கை இராணுவத்துடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் மோதுவதன் மூலம் இராணுவச் சமநிலை ஒன்றைக் கொண்டுவர வேண்டும் என்பதே விடுதலைப் புலிகளின் நோக்கமாக இருக்கிறது.

அகதிகளைப் பயன்படுத்தி இந்தியா மீண்டும் தலையிட முயற்சிக்கின்ற நிலையிலும், வளைகுடாப் பதற்றங்களினால், பொருளாதார மற்றும் எரிபொருள் நெருக்கடிகளாலும், அதிகரித்து வரும் இராணுவச் செலவினங்களால் ஐரோப்பிய நாடுகள் உதவி வழங்கத் தயங்குவதாலும், வட-கிழக்கு மோதல்களை படிப்படியாக இலங்கை அரசு தணித்து வருவதானது இன்றைய சூழ்நிலையில் குடாநாட்டில் இராணுவத் தேக்கநிலை ஒன்றைத் தோற்றுவித்துள்ளது.

இலங்கை இராணுவத்தின் முழுமையான பிடியிலிருக்கும் கிழக்கு மாகாணத்திலும் இத்தகைய ஒரு இராணுவத் தேக்க நிலை ஒன்றைக் கொண்டுவர விடுதலைப் புலிகள் பிரயத்தனம் செய்து வருகின்றனர்.

அதே வேளை மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதில் இரு தரப்பினரும் திரைமறைவு முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். எங்கிருந்து பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது என்பதே தற்போதைய பிரச்சனை யாகவுள்ளது.

●

## திண்ணைப் பேச்சு

சந்திர சூரியர்

### ஒலிவ் ஒயில் (Olivc Oil) இளைஞர்.

அவர் ஒரு தமிழீழப் பற்றுக் கொண்ட கலை, கலாச்சார தமிழ் புருசன். பண்பாடு மிகவும் முக்கியம். காதல் கல்யாணம் கூட தமிழ் கலாச்சாரத்திற்கு ஒவ்வாதென்ற கருத்தாழம் கொண்டு மகனை தேசிய இயக்க வீரரிடமிருந்து காப்பாற்றி இலண்டன் மீட்டெடுத்த காவியத் தலைவர்.

ஆனால் 50 தாண்டித் தயங்கிய அவருக்கு வாழ்க்கையில் புது நாட்டம். கலாச்சாரத்தில் சிறு குழப்பம். மனைவியையும் பிள்ளைகளையும் விரட்டி விட்டு புது நங்கையுடன் வாழ்வினில் புது நாடகம்.

அண்மையில் அவர் வீடு வந்து தங்கியிருந்தார் இளமையான நண்பர் ஒருவர். தாடிச் சவரம் செய்த பின்னர் நாடியில் பூசிக் கொள்ள ஒலிவ் ஒயிலும் தேசிக் காயும் கேட்டாராம் அவர் ஒருநாள். காரணம் வினாவினார் உதாரண புருசர். இளமையைக் காக்கும் என்றார் இளையவர். அன்று தொட்டு நம்மவர் தேசிக்காயும் ஒலிவோயில் புட்டியுமாகத்தான் வாழ்க்கையென புதிதாக வந்தவவும் குறை பேசத் தொடங்கிவிட்டார்.

### தேவலோகத்திலும் ஒரே "போர்"

வெள்ளையரைப் பார்த்து "இவர்கள் பண்பாடு, கோட்பாடு எதுவமற்ற மிருகங்கள்" எனத் தமிழரும், தமிழரைப் பார்த்து "இவர்கள் நாகரீகமோ முன்னேற்றமோ அற்ற காட்டுமிராண்டிகள்", என வெள்ளையரும் முகம் சுழித்து வாழும் சமுதாயமிது.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் அமைதி தேடும் இலங்கை அகதிகள்

இலங்கை இந்திய கடல் எல்லையில் இந்திய கடற் படையின் நடமாட்டம் அதிகரிக்கப்பட்டதும் உளவு பார்த்தன என்ற சந்தேகத்தின் பேரில் இலங்கை அரசுக்கு சொந்தமான நவீன வானொலித் தொடர்பு வசதி கொண்ட இரண்டு படகுகள் இந்திய கடற் படையினால் கைப்பற்றப்பட்டது. இதனால் இலங்கைக் கடற்படையின் நடமாட்டம் கட்டுப் படுத்தப்பட்டது.

இதற்குப்பின் தமிழ்நாடு முதலமைச்சர் இலங்கை அகதிகளுக்கு தங்குமிட வசதியும் ஏனைய புனர்வாழ்வு உதவிகளும் வழங்கப்படும் என்று அறிவித்ததும் அச்சம் பதட்டம் நிறைந்த நிலையில் காணப்பட்ட வட-கிழக்கு தமிழ் மக்கள் பெருமளவில் அகதிகளாக தமிழ்நாட்டுக்கு வரத்தொடங்கினர்.

இவர்கள் ஈழத்திலும் தமது கடற்பயணத்திலும் அனுபவித்த துன்பங்கள் எண்ணிலடங்கா!. அகதிகள் பெரும்பாலானோர் இந்த விதமான அனுபவங்களை கண்ணீருடன் விபரித்துள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு தமிழ்நாடு வந்துள்ள திரு.ரவீந்திரன் என்பவர் "கதிர்" இதழுக்கு எழுதியவற்றை இங்கு தருகின்றோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மணியந்தோட்டம், மாதகல், தாளையடி ஆகிய பகுதிகளிலிருந்தே எமது படகுகள் புறப்பட்டன. கட்டணமாக ரூபா 1500 முதல் 2000 வரை அறவிடப்பட்டது. மன்னார் மாவட்டத்தில் நாச்சிக் குடா கிராமம் போன்ற கரையோரப் பிரதேசங் களிலிருந்து புறப்பட்ட படகுகளுக்கு கட்டணமாக ரூபா 500 முதல் 1500 வரை அறவிடப்பட்டது. தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்த மோதலினால் பணப்புழக்கம் குறைவாக இருந்ததனால் பண வசதியற்ற மக்கள் தம்மிடமிருந்த தங்க நகைகளை அதன் பெறுமதியிலும் குறைவாகவே படகுக் காரர்களிடம் படகுக் கட்டணமாக செலுத்தினர்.

விமானத்தாகுதலுக்கு பயந்து இரவிலேயே பெரும்பாலும் பயணிகளை ஏற்றுவதுண்டு அப்படி இரவில் ஏறும் அவசரத் தில் படகுகளில் ஏறும் போது தமது குடும்பங்களை தவறவிட்டு தனியாக இந்தியக் கரைகளில்

ஆனால் மனிதர்கள் எங்கேயும் ஒரே தன்மை கொண்டவர்கள்தான். அவர்களது சூழலே அவர்களது போக்குகள், நடத்தைகள், வாழ்க்கைமுறைகள் என்பவற்றை வகை செய்கின்றன என்பதை உணர்ந்து மனிதர்பால் நம்பிக்கை கொண்டு வாழ்வோர்களும் இங்கே அதிகம்தான். காலத்தின் தாக்கத்தினால் இவர்களது நம்பிக்கைகள் உண்மையென உணர்த்தப்படுகின்றன போலும்....

தேவலோகத்தில நிச்சயமாகுபவை எமது கல்யாணங்கள் என்ற பூரண நம்பிக்கையுடன் இயங்கும் எமது சமுதாயத்தினிடையே இதனால் போலும் பாரிய குழப்பங்கள் தொடங்குகின்றன. விவாகரத்து என்பது இப்போது ஏற்கக்கூடிய சமுதாய முடிவாக மாறிவருகிறது. ஆனால் அதை நோக்கிய காரணங்களோ சில வேளைகளில் வியப்பையும் தருகின்றன.

அண்மையில் ஒரு குடும்பத் தகராறு விவாகரத்து வரை போயிற்று. முடிவைத் தவிர்க்க எண்ணிய ஆண்மகனின் நண்பர் ஒருவர் புத்திமதி சொல்ல முயன்றனர். "உங்களுக்கென்ன வீடு உண்டு, கார் பணம் பொருள் எல்லாம் இருக்கு, பத்தாததுக்கு ஒரு பிள்ளையும் உண்டு, இதற்குமேல் என்ன குறை.....? என்றார்கள் பெண்ணைப் பார்த்து. " உங்களுக்கு தெரியாது என்பாடு.... அவர் ஒரே போறிங் (boring)" என்று ஒரே சொல்லில் விளக்கம் தந்தவர் தொடர்ந்து விளக்கத்திற்கு உகந்த உதாரணங்களைத் தரத் தொடங்கினாராம்.

## யதார்த்தம் = அதர்மம் ???

"ஊரே எரியுது. இங்கை சனத்துக்கு ஒரு கவலையுமில்லை..." பிறந்தநாள் விழா ஒன்றில் அனுங்கினார் ஓர் எஞ்சினியர். "கிழக்கு முழுவதும் அழிஞ்சே போச்சு! அப்ப நீர் ஒரு குரலும் எழுப்பினதாகத் தெரியவில்லையே ? இப்ப மட்டும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏங்கிக்கொண்டு சிலர் நிற்கிறார்கள். திருகோணமலையைச் சேர்ந்த ராஜேஸ்வரி என்ற யுவதியும் அவளது 9வயது சகோதரியும் ஒரு படகிலும், பெற்றோர் வேறொரு படகிலும் பிரயாணம் செய்தனர். ராஜேஸ்வரி வந்த படகு இராமேஸ்வரம் கரையை அடைந்தது மற்றய படகு கரையை வந்தடைய வில்லை, படகுக்கு என்ன நடந்தது என்று எவருக்கும் தெரியவில்லை. மாற்று உடையோ,பணமோ இன்றி ஈர உடைகளுடன் கடலையே ஏக்கத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாள் அந்த யுவதி.

கடல் கொந்தளிப்பு காரணமாக பயணிகள் மிகவும் கஷ்டப்பட்டனர். ஒரு தாய் தனது 2வயது மகனை தண்ணீர்படாமல் பொலித்தீனால் மூடிக்கட்டிக் கொண்டுவந்து கரையில் பார்க்கும்போது குழந்தை மூச்சுத்திணறி இறந்திருந்தது தெரியவந்தது. தாய் தனது மகனின் சடலத்தை கரையில் வைத்துக்கதறிக் கொண்டிருந்ததைப் பார்த்து ஏனையோரும் ஒன்றும் செய்யமுடியாமல் கலங்கிய கண்களுடன் சோகமாக நின்றனர்.

சிறிலங்கா கடற்படையின் பார்வையில் சிக்கிய அகதிபடகுகள் கடற்படைப் பீரங்கிப்படகுகளினால் மூழ்கடிக்கப்பட்டன. வேறுசிலர் கைதுசெய்யப்பட்டு சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர். இப்படி கொல்லப்பட்ட அகதிகளின் சடலங்கள் ஈழத்து கரைகளில் தினந்தோறும் ஒதுங்கிய வண்ணமிருந்தன. சிலபடகுகளும் சடலங்களுடன் கரைகளில் ஒதுங்கின.

இராமேஸ்வரம் துறைமுகப் பகுதியிலேயே பெரும்பாலான அகதிகள் வந்திருக்கின்றனர். வேறுசில கரையோரப் பிரதேசங்களிலும் வந்திறங்கினர். சராசரியாக 2000 முதல் 3000 வரையிலான அகதிகள் நாளாந்தம் வருகின்றன.

மாகாணசபை ஆட்சிக் காலத்தின் போது தமிழ்த்தேசிய இராணுவம் (TNA), மக்கள் தொண்டர்படை ஆகியவற்றில் அங்கம் வகித்தவர்கள் மண்டபம், இராமேஸ்வரம் ஆகிய இடங்களில் தனிமுகாம் களில் தங்கியிருக்கும் இளைஞர்கள், அகதிகளில் இயக்கங்களில் இருந்தவர்கள் என சந்தேகிக்கப்படும் நபர்களை பகிரங்கமாகவே பொலிசார் முன்னிலையிலும் கூட விசாரிக்கிறார்கள். ஆண்களை மட்டுமல்ல யுவதிகளையும் பெற்றோருக்கும், பொலிசாருக்கும் முன்னிலையில் அடித்து துன்புறுத்துகிறார்கள் இவர்களை யாரும் தடுப்பதுமில்லை, கேட்பதுமில்லை. விசாரிப்பதற்கு என்று வெளியே கொண்டு செல்லப்பட்ட இளைஞர்கள் சிலர் மீண்டும் முகாமிற்கு திரும்ப வில்லை.

முகாம்களிலேயும் துயரங்கள் தொடர்ந்தன. அகதிகளின் பெருமளவு எண்ணிக்கைக்கு ஏற்ப வசதிகளை தமிழ் நாட்டு அரசினால் செய்து கொடுக்க முடியவில்லை. அரசு ஒழுங்கு செய்யக் கூடியவேகத்திலும் பார்க்க பெருமளவு எண்ணிக்கையில் அகதிகள் வந்து கொண்டிருந்தார்கள். இதனால் தங்குமிடம், குடிநீர் உட்பட அத்தியாவசியமானவசதிகளை செய்துகொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது அல்லது செய்து கொடுக்கப்படாமலே போகின்றது.

முகாம்களில் தங்கும் அகதிகளுக்கு மாதம் ஒன்றுக்கு குடும்பத் தலைவனுக்கு ரூபா150ம், ஏனைய குடும்ப அங்கத்தினர்களுக்கு ரூபா120ம் வழங்கப்படுகிறது. இவற்றைவிட சமையல் பாத்திரம், உடைகளும் வழங்கப்படுகின்றன. இவை அக்குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை. இதனால் இவர்கள் இலங்கையில் இருந்து வரும்போது கொண்டு வந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள், நகைகள் என்பன முகாம்களுக்கு அருகிலேயே இதற்கென காத்திருக்கும் தரகர்கள் மூலம் விற்கத் தொடங்குகின்றனர். இவர்கள் பொருட்களின் பெறுமதியிலும் பார்க்க மிகக்குறைவாகவே கொடுக்கின்றனர். இலங்கைப் பணமும் அதன் பெறுமதியிலும் பார்க்க மிகக்குறைவாகவே மாற்றப் படுகின்றது. ஈழத்தில் இருந்து அகதியாக வந்தவர்கள் என்ற காரணத்தால் தரகர்கள்

---

ஏன்...? எஞ்சினியாது ஓரவாங்கியத்தனத்தினை சுட்டிக்காட்டியபடியே, Birthday Party யில் தனது சமூகத்திற்கும் வக்காலாத்து வாங்கும் தொனிப்புடன் கூறினார் இன்னுமொரு யாழ்வாசி. விக்கிக் குவளையை நிரப்பியவண்ணம் இருந்த எஞ்சினியர் "நான் சரியான பிசி" என பதிலை சுருக்கமாக வழங்கினார்.

சற்றே உணர்வு கொண்டு சுயகுற்றமுணர்ந்த மற்ற யாழ்வாசியோ அத்துடன் விட்டுவிடுவதாக இல்லை. பிருத்தானியா முழுவதும் யாழ்ப்பாணத்தார் எனவும் கிழக்கு மாகாணத் தமிழர்பால் எதுவித அக்கறையும் கிடையாது எனவும் பல்வேறு உதாரணங்களைக் கூறி உறுத்திய வண்ணம் இருந்தார். எஞ்சினியர் சிறு நேரம் கழித்து "நீர் ஏன் கிழக்கு கிழக்கு என்று அழுகிறீர்?" என்றார் வினயமாக. "நான் அங்கே தொழில் செய்திருக்கின்றேன், மக்கள் மத்தியில் வேலை செய்திருக்கின்றேன்" என்றார் மற்றவர் சற்றே ஆத்திரத்துடன்.

எஞ்சினியரோ தனது அதிசிறந்த புத்திஜீவிதத்தன்மைக்கு தருணம் கண்டவர் போல படபடப்புடன் ஒரு பதிலை பெறும் லெக்சரைப்போல தந்தார். "நீர் கொஞ்சக் காலம் அங்கை போய் நிண்டுபோட்டு கிழக்கு கிழக்கு என்கிறீர். தமிழீழப்போர் யாழ்ப்பாணத்திலைதான் தொடங்கினது. கிழக்கிலை ஏதாவது சண்டை தொடங்கிறதிற்கு இரண்டு வருசம் மேலும் சென்றுது. இந்தநிலைமையில குடாநாட்டிலை அழிவு என்றால் கொஞ்சம் கூடக் கவலை இருக்கும்தானே. இதை ஏதோ சுயநலம் எனச் சிலர் விமர்சிக்கினம். உண்மைதான். செல்பிஸ்னஸ் (Selfishness) என்பது ஒரு யதார்த்தம். யாழ் குடாநாடுதான் போராட்டத்திற்கு தலைமை தாங்கிறது என்பதும் ஒரு யதார்த்தம். அதினாலை நாங்கள் கொஞ்சம் யாழ்ப்பாணத்திலை நடக்கிறதைப் பார்த்து கவலைப்படுகிறதும் யதார்த்தம்தான். யதார்த்தங்களின் யதார்த்தங்களும் ஒருவித யதார்த்தங்கள்தானே!" என மற்றவரை வாயடைக்க வைத்துவிட்டார். ●


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்களுக்கும் விலை பேச முற்படுகிறார்கள்.

பொலிசாரின் நடவடிக்கைகள் அகதிகள் அனைவரையும் விடுதலை இயக்கங்களை சேர்ந்தவர்கள் என்றும், குற்றவாளிகள் போலவும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள் இவர்களது நடவடிக்கைகளை கண்டு எரிச்சலுற்ற வயோதிபர் ஒருவர் "இவங்களுக்கும் சிங்கள பொலிசாருக்கும் ஒரே வித்தியாசம் அவங்கள் கடுவாங்கள் இவங்கள் கடமாட்டாங்கள்" என கூறினார். தற்பொழுது விசேட பொலிஸ் படை AK47 துப்பாக்கிகளுடன் முகாம்களில் நிறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் மாநில மத்திய, உளவு பிரிவுகளின் செயற்பாடுகளுக்கும் குறைவில்லை.

செங்கை அண்ணா மாவட்டத்தில் புழல் என்னுமிடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மத்திய சிறைச்சாலையில் தற்பொழுது அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இது சென்னைக்கு மிக அருகிலேயே உள்ளதால் கட்டுப்பாடுகள் அதிகம். விரக்தியடைந்த இளைஞர் ஒருவர் "நாம் என்ன அகதிகளா? கைதிகளா? என்று வினாவினார்".

அகதிகள் தொகை அதிகரித்துக் கொண்டே செல்ல இந்தப் பிரச்சினை அதிகரித்துக் கொண்டு செல்லப்போகிறது. இவைகள் அகதிகளின் பக்கமாகவுள்ள பிரச்சனையாக ஒருபுறமிருக்க மறுபுறத்தில் வேகமாக அதிகரிக்கும் அகதிகள் பிரச்சனையைத் தொடர்ந்து தமிழ்நாடு மாநிலம் பெரும் பிரச்சனைக்கு உள்ளாகியுள்ளது. ஏற்கனவே இங்கு அரச வேலைகள் ஆமை வேகத்திலேயே நடைபெறுகின்றன.

அகதிகள் பெருமளவில் தொடர்ந்து வருவதனால் அரசநிர்வாகத்தில் ஒருபகுதி அகதிகளைப் பராமரிப்பதிலேயே செலவிடுகின்றது. இதனால் இங்குள்ள வேலைகள் பெருமளவில் தடைப்படுகின்றன. இப்போது 1,50,000 அகதிகள் வரை வந்திருக்கின்றனர். இம்மாத இறுதிக்குள் இத்தொகை 2,00,000 வரை செல்லும் என எதிர் பார்க்கப் படுகின்றது. ஈழத்தில் எந்த அமைதியும் ஏற்படாமல் போனால் இத்தொகை அதிகரித்துக் கொண்டே செல்லும்.



இராமேஸ்வரக் கரையில் இலங்கை அகதிகள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 3000 அகதிகள் வரை தங்கவைப்பது என முடிவு எடுக்கப்பட்ட பின்னர் 5000 ஆக்கப்பட்டு இப்போது அந்த எண்ணிக்கையும் கடந்துசெல்கின்றது. ஏற்கனவே சட்டம், ஒழுங்கு காப்பதில் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாகவும் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கு தமிழ்நாட்டுப் பொலிசாரின் எண்ணிக்கை போதாதென்று மத்திய ரிசேவ் பொலிஸ்படை (CRPF) சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளது. இப்படியே அகதிகள் அதிகரித்துக் கொண்டுபோனால் தமிழ்நாடு மாநிலம் தாங்குமா?

தமிழ்நாட்டில் தற்பொழுது அகதிகளுக்கும் இயக்கங்களுக்கும் எதிராக எழுப்பப்பட்டுவரும் கோசங்களும், பிரச்சாரங்களும் இயக்கங்கள் ஒற்றுமையின்மை, இயக்க மோதல்கள் பற்றியே யாகும். இயக்க படுகொலைகளை அனைவரும் வெறுக்கின்றனர்.

தமது வாழ்க்கையை சொந்த மண்ணில் தொலைத்துவிட்டு அந்நிய மண்ணில் வந்து ஏக்கம் நிறைந்த முகங்களுடன் அமைதி ஒன்றைத் தேடி அகதிகள் அங்கலாய்த்து நிற்கிறார்கள். ஆயினும் இந்த அகதிகளின் முதுகிலேறி மீண்டும் ஒரு இந்திய அரசியல் சவாரி செய்யப்பட போகின்றது என்ற அச்சமே மேலோங்கி நிற்கின்றது.

தமிழ்நாட்டில் அகதிகளைப் பராமரிக்கும் அதிகாரிகளுக்கு எரிச்சலும், வெறுப்பும் ஏற்படும் அதேவேளை இந்திய அரசியல் வாதிகளுக்கு பொழுதுபோக்கும் ஏற்பட்டுள்ளது. ●

## வெளிநாட்டவர் இலங்கைப் பிரஜையாக விசேட சட்டங்கள்.

இலங்கையில் வெளிநாட்டவர்கள் குடியேறுவதற்கான விண்ணப்பங்களை வெகுவிரைவில் இலங்கை அரசு கோரவுள்ளது. வேலை வாய்ப்பை முன்னிட்டு குடியேறுபவர்கள் என்ற திட்டத்தின்கீழ் இதனை அமுல்படுத்தவுள்ளது. இவ் வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் இலங்கையில் முதலீடு செய்பவர்களிடமிருந்தும், சிறப்புத் தகைமையுள்ளவர்களிடமிருந்தும் இவ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

இவர்களுக்கு முதலில் 5 வருடகால தங்குவதற்கு அனுமதி வழங்குவதெனவும், அதன் பின்னர் இலங்கையின் தேசிய அபிவிருத்திக்கு அவர்களாற்றிய பங்களிப்பினைக் கொண்டு பிரஜாவுரிமை வழங்குவதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக முதலீடு செய்பவர்கள் முதலீட்டிற்காக 1,50,000 அமெரிக்க டொலர்களும், குடும்ப அங்கத்தவர்களுக்காக (கணவன்,மனைவி,குழந்தைகளுக்கு) 25,000 அமெரிக்க டொலர்வரை வைப்புச் செய்யவேண்டுமெனவும் அவர்களுடைய முதலீடுகள் கணிசமான வேலைவாய்ப்பை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டுமெனவும் நிபந்தனையிடப்பட்டுள்ளது, மற்றும் இவர்கள் போதியளவு நிதியை வங்கியில் தொடர்ந்து பேணிவர வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர்களிடமிருந்து....

கதிர் வாசகன்,
அடங்காத்தமிழன்,
பிரான்ஸ்.

மதிப்பிற்குரிய கதிர் ஆசிரியர் குழுவிற்கு,

உங்களது பத்திரிகையைப் படித்தேன். முற்றிலும் சரியான ஆய்வில் வரைந்துள்ளீர்கள். மிகவும் நல்ல ஆய்வு வரவேற்கத்தக்கது.

மேலும் தொடர்ந்து பல நாடுகளின் விடுதலை அமைப்புக்களையும், அமைப்பைச் சார்ந்தவர்களையும் பேட்டி கண்டு வெளியிடவும். இத்துடன் வாசகர் கேள்வி பதிலும் சேர்த்தல் நல்லம்.

அதேநேரம் புற்றீசல்கள் போல் பல சஞ்சிகைகள் வலம்வந்து அவற்றில் பல இடைநிறுத்தப்பட்டதாக கூறியுள்ளீர்கள். அதற்கு காரணங்கள் பல. அதில் பொருளாதாரப் பிரச்சனை, செய்திகள் கிடைக்கும் தடங்கல்கள், வாசகர் ஒத்துளைப்பின்மை இப்படி பல பிரச்சனைகள்.

வாசகர்களும் தென்னிந்திய கலைஞர்களையும், தென்னிந்தியப் பத்திரிகைகளையும் மட்டும்தான் வரவேற்கின்றார்கள். அது ஒரு மாயையே, அல்லது ஒரு மூட நம்பிக்கையையோ தெரியாது.மற்றது இவ்வளவு பல கன்டங்களுக்கும் மத்தியில் பலர் முன் வந்து தொடங்கி ஒன்றிரண்டு இதழ்களாவது தந்தார்களே. மற்றும் அவர்கள் தங்களது கருத்தைக் கூறவும் அதைப் பயன்படுத்தினார்கள். ஆனபடியால் நீங்கள் அவற்றைப் பலவீனமாகவோ எண்ணக்கூடாது. நீங்கள் இந்த சஞ்சிகையைத் தொடங்குமுன்னும், தொடங்கி வெளியிட்டு அதன் நல்லது கெட்டது போன்றவற்றை அறியுமுன்பு மற்றவர்களைச் சாடுவதை ஏற்கமுடியாது.

---

ப.வி.சிறீரங்கன்,
மேற்கு ஜேர்மனி.

"கதிர்" ஆசிரியர் குழுவினருக்கு வணக்கம்,

தங்களது முதலாவது இதழ் கிடைக்கப் பெற்றோம், நன்றி

"மனித சமுதாயத்தில் நிலவும் முரண்பாடுகளை, சமூக வளர்ச்சிக்கான படிக்கட்டுகளில் ஏற்றி, அதனூடாக தேடலையும்-அது சார்ந்த ஐக்கியத்தையும் "கதிர்" ஏற்படுத்த வேண்டிய இன்றைய சூழலில் உள்ளதால்-அதற்கு பாரிய சமூகக் கடமை உண்டென்பதால் அதன் "ஜனனத்தை" வரவேற்று வாழ்த்துகிறோம்.

செல்வன்,
சுவிற்சலாந்து.

அன்புடன் கதிர் ஆசிரியர் குழுவிற்கு,

தங்களது முதல் இதழ் கிடைத்துப் படித்தேன். வடகிழக்கு மோதல் எதுவரை தொடரும்? எனும் கட்டுரையில் தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கப் போகின்றதாக ஈரோஸ் கூறுகிறது எனும் பந்தி முழுதும் சுத்த அபத்தம். அரசியலில் உறுதியான நிலைப்பாடு எதுவும் அற்ற சந்தர்ப்பவாத ஈரோசையும் அதன் தலைமையையும் இன்னும் ஏதோ பெரிய தீர்க்க தரிசிகளாக காட்ட முயல்கின்றீர்கள். பரிதாபந்தான். வட கிழக்கில் நடைபெறும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மூழ்கிப் போகாமல், வட கிழக்கு மலையகம் உள்ளிட்ட நிரந்தர தீர்வை நோக்கி செயல்படுவதாக கூறுகிறீர்கள். வட கிழக்குடன் மலையகத்தை இணைத்தால் அதுவும்கூட தேசியவிடுதலைப் போராட்டம் இல்லாமல் வேறு என்ன? மலையகமக்களையும் தமிழ்பேசும் தேசிய இனமாக கணித்துத்தானே ஈழவர் இயக்க சுலோகம் எழுதுகின்றனர்.

பாராளுமன்றத் தேர்தலில் தனது சுயஅடையாளத்தை நிலைநாட்டியது என எழுதுகிறீர்கள்.இதில் என்ன சுயஅடையாளம் உள்ளது. EPRLF,TELO,ENDLF,போன்றவை கூடத்தான் போட்டியிட்டன. புலிகளின் மறைமுக ஆதரவு இருப்பதாகக் கருதி EROS போட்டியிட்டது. இப்போது அதுவே துரோகமாகப் புலிகளால் பேசப்பட்டதும்,மிரட்டப்பட்டதும் ராஜினாமா.இதில் நீங்கள் கண்ட சுயஅடையாளம்தான் புரியாத புதிராக உள்ளது.

மலையகமக்கள் பற்றிய கட்டுரை நன்றாக இருந்தது. இதில் இரட்டை பிரஜாவுரிமையை மேற்படி நாடற்றவர்களுக்கு கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கை சற்று மாறுபட்ட நல்ல கோரிக்கையாக உள்ளது.

SWAPO இயக்கத்தின் பிரதிநிதியின் பேட்டி நல்லவிடயம்,எனினும் நமீபிய விடுதலைக்காக போராடிய அமைப்புக்கு தேர்தலில் 72 இடங்களில் 41 ஆசனம் மட்டுமே கிடைத்தது ஏமாற்றமாக உள்ளது. மேலதிகமாக 10 ஆசனங்களையே SWAPO ஆல் பெறமுடிந்தமை பற்றியும் கேட்டு எழுதியிருக்கலாம்.

"கதிர்" வாசகர்களிடம் இருந்தும், படைப்பாளிகளிடமிருந்தும் ஆக்கங்களை வரவேற்கின்றது. மேலும் கதிர் தொடர்பான விமர்சனங்களையும் அது எதிர்பார்க்கின்றது. உங்கள் கருத்துக்களில் இருந்து கதிர் தன்னைச் செழுமைப்படுத்திக்கொள்ள விரும்புகின்றது.

முகவரி: KATHIR
POSTFACH 610494
1000 BERLIN 61
GERMANY



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வளைகுடா நெருக்கடிகளால் நிச்சயமற்ற நிலையில் அந்நியச் செலாவணி

வளைகுடாவில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக மத்திய கிழக்கிலிருந்து இலங்கைக்கு கிடைக்கப் பெறும் அந்நியச் செலாவணி 1600 கோடி ரூபா வருமானம் நிச்சயமற்ற ஒன்றாகவும், குவைற்றிலிருந்துமட்டும் மாதமொன்றிற்கு 20 கோடி ரூபா வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது. குவைற் விமானச் சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் ஆண்டொன்றிற்கு 40 கோடி ரூபாவும் எயர் லங்கா விமான நிறுவனத்திற்கு 80 கோடி ரூபாவும் இழப்பாகவுள்ளது.

மத்திய கிழக்கு பதற்றம் காரணமாக இலட்சக் கணக்கான இலங்கையர்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். இதில் பெரும்பாலானோர். பெண்களாவார். 10,000 பேர் வரையில் நாடு திரும்பியுள்ளனர்.

ஈராக்கிற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை வர்த்தகத் தடை விதித்த பின்னர் இலங்கைத் தெயிலையை ஏற்றிச் சென்ற ஈராக் கப்பல் சனூபியா வளைகுடாவில் வைத்து அமெரிக்க கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. இதுவே முதன்முதலில் கைப்பற்றப்பட்ட கப்பலுமாகும்.

குவைற்றை ஈராக் கைப்பற்றியதையடுத்து உலகச் சந்தையில் எரிபொருளின் விலை பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஆகஸ்ட் மாதம் இரண்டாம் திகதிக்கு முன்னர் பீப்பாய் எண்ணெய் 18 டொலராக இருந்து பின்னர் 28 டொலராக அதிகரித்துள்ளது. இதனால் இலங்கை அரசுக்கு 177 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. ●

# மொசாட்டின் சதிகள் ஆதாரங்களுடன் அம்பலம்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதிக்கான நிதியை எடுத்து கடந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது இராணுவ நடவடிக்கைகளுக்காகப் பாவிக்கப் பட்டதாக முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் மந்திரிகள் மீது ஜனாதிபதி பிரேமதாச குற்றச் சாட்டுச் சுமத்தியுள்ளார்.

மேற்படி குற்றச்சாட்டை இஸ்ரேலின் உளவுஸ்தாபனமான மொசாட்டில் இருந்த உளவாளி விக்டர் ஒஸ்டோவிஸ்கி(Victor Ostrovsky)என்பவர் நியூ யோர்க்கில் வெளியிட்ட "மொசாட்டினரின் ஆக்கங்களும் அழிவுகளும்" என்ற புத்தகத்தினை ஆதாரம் காட்டி இக்குற்றச்சாட்டை ஜனாதிபதி சுமத்தியுள்ளார். மேற்படி நடவடிக்கையை விசாரிப்பதற்காக ஒரு விசேட விசாரணைக் குழு ஒன்றையும் நியமித்துள்ளார்.

அப் புத்தகத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் செயற்திட்ட அறிக்கையை இஸ்ரேலிய உளவாளிகள் போலியாகத் தயாரித்து கொடுத்துதவியதாகவும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டை முன்னாள் மகாவலி அபிவிருத்தி மந்திரியாக இருந்த காமினி திசநாயக்கா மறுத்துள்ளார்.

மேலும் புத்தக ஆசிரியர் விக்டர் ஒஸ்டோவிஸ்கி கொழும்பில் ஆங்கிலப் பத்திரிகைக்குப் பேட்டியளிக்கையில் தற்போதைய இலங்கை இராணுவத்திற்கு எதிராக விடுதலைப் புலிகளால் பாவிக்கப் படும் பொறி வெடிகள் மொசாட்டினரால் தயாரிக்கப் பட்டவை எனவும் கூறியுள்ளார். ●

## பிரிகெடியர் கொப்பேகடுவவிற்கு பதவி உயர்வு

யாழ் நகரில் அண்மைய தாக்குதல்களுக்கு பொறுப்பாக விருந்த இராணுவத் தளபதி கொப்பேக்கடுவ கொழும்பில் உள்ள கூட்டுப்படைத் தலைமை யகத்திற்கு பதவி உயர்வு கிடைத்துச் சென்றுள்ளார். இவர் சகல இராணுவ நடவடிக்கை களுக்கும் பொறுப்பதிகாரியாக விளங்குவார்.

1987ல் நிகழ்த்தப்பட்ட ஒப்பரேசன் லிபரேசனுக்கு வடமராட்சியில் தலைமை வகித்ததன் மூலம் கொப்பேகடுவ இலங்கை இராணுவ வட்டாரங்களில் திறமை மிக்கவராகக் கணிக்கப் பட்டுள்ளார். பிரிகேடியராக இருந்த கொப்பேகடுவ 87ல் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்த போது பதவி உயர்வு வழங்கப் பட்டு விசேட பயிற்சிக்காக வெளிநாடு அனுப்பப் பட்டார். அதன் பின் இராணுவத் தலைமையகத்தில் விசேட இராணுவப்பயிற்சிகளுக்கு பொறுப்பாக நியமிக்கப் பட்டிருந்தார். இவர் மேஜர் ஜெனரலாக பதவி உயர்வு பெற்று யூன் முதல் நடைபெற்ற வட கிழக்குத் தாக்குதலில் முதலில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிலும் பின்னர் திருகோணமலைக்கும் இறுதியாக வடமாகாணத்திற்கும் விசேட இராணுவ நடவடிக்கைகளுக்குத் தலைமை வகித்தார். தற்போது பதவி உயர்வு பெற்று கொழும்பு கூட்டுத் தலைமையகத்துக்கு மாற்றலாகியுள்ளார். ●

## "மிக்" ரக விமானங்கள் வாங்கத் திட்டம்

இதுவரை நடந்த மோதலில் 536 சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டும், 457 பேர் வரையில் காணாமல் போயும், 750 பேர் வரையில் காயமுற்றும் உள்ளனர் என உத்தியோகபூர்வ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு (தமிழ்மக்கள் மீதான இராணுவ நடவடிக்கைக்கு) இதுவரை பதினைந்து கோடியே பத்து இலட்சம் ரூபாவரை இலங்கை அரசுக்கு கிடைத்துள்ளது. யாழ் நகரில் தாக்குதலைத் தொடருவதற்கு "மிக்" ரக விமானங்களை வாங்கப் போவதாகவும் இராணுவ வட்டாரங்கள் அறிவித்துள்ளது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

## இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகை 67,000 மில்லியன் ரூபா

1991ம் ஆண்டு இலங்கை அரசுக்கான வரவு செலவுத் திட்டம் 139,000 மில்லியன் ரூபாவாகும். இதில் மீண்டு வரும் செலவினம் 63,500 மில்லியன் ரூபாவாகும். மொத்த வருமானம் 72,000 மில்லியன் ரூபாவாகும். அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைக்கு 67,000 மில்லியன் ரூபா துண்டுவிழும் தொகையாகும். இத் துண்டுவிழும் தொகையை இலங்கை அரசு உள்ளூர் கடன்கள், வெளிநாட்டு உதவி, மற்றும் வேறு வழிகளில் அறவிட தீர்மானித்துள்ளது.

கடந்த 26.8.90 தொடக்கம் இலங்கை போக்குவரத்துசபை பிரயாணக் கட்டணங்களை 50% த்தால் உயர்த்தியுள்ளது. வட கிழக்கில் இலங்கை அரசு தாக்குதலை மேற்கொண்டு வருவதால் தலைநகரில் வர்த்தக நடவடிக்கைகள் 40% வீழ்ச்சி அடைந்துள்ளது. மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களிலிருந்து மீன், கருவாடு யாழ்ப்பாணம்,வவுனியாவிலிருந்து உபஉணவுப் பொருட்கள், பழவகைகள் மட்டக்களப்பு , திருகோணமலை, அம்பாறை ஆகிய பகுதிகளிலிருந்து அரிசி தலைநகருக்கு வராததால் விலைவாசி அதிகரித்துள்ளது.

விலைவாசி உயர்வு , பஸ் கட்டண உயர்வு, வாழ்க்கைப்பழு என்பவற்றை பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தபோது எதிர்ப்பு தெரிவிக்கும் நோக்குடன் எதிர்க் கட்சியினர் 32 பேர் மூன்றுமணி நேரம் பாராளுமன்றத்தினுள் தரையிலமர்ந்து சத்தியாக்கிரகம் செய்தனர். ●

## இராணுவக் கெடுபிடியில் பல்கலைக் கழக மாணவர்கள்

கண்டியில் தனியார் வீடொன்றில் தங்கியிருந்த ஐந்து பொறியியல் பட்டதாரி தமிழ் மாணவர்கள் காணாமல் போயுள்ளனர். இவர்கள் ஐவரும் சாவகச்சேரியைச் சேர்ந்தவர்களாவர். மனோகரன் ரவிகரன், வேலாயுதம் இராஜேந்திரன், புஸ்பமோகன், வெற்றிவேலு ரத்தினலிங்கம், வேலாயுதபிள்ளை சத்தியபவான் ஆகியோராவர்.இவர்களது வீட்டிற்கு கறுப்பு உடை தரித்த நாலுபேர் ஜீப்பில் வந்து இவர்களைக் கடத்திச் சென்றுள்ளனர். இதுவரை 300 பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போயுள்ளனர். பேராதனையில் 90 பேரும், சிறீ ஜெயவர்த்தனபுரத்தில் 66 பேரும், களனியில் 47 பேரும், றுகுணவில் 50 பேரும், கொழும்பில் 50 பேரும், மொறட்டுவவில் 15 பேரும் ஆகும். மேலும் 49 பல்கலைக்கழக மாணவர்கள் கொல்லப் பட்டுமுள்ளனர். தடுப்பு முகாமில் 127 பேரும், இராணுவ முகாம்களில் 377 பேரும் உள்ளனர். ●

## சிதறல்கள்

● திருகோணமலைப் பகுதியில் வெளிநாட்டு நிறுவனத்தினால் நிறுவ உத்தேசித்திருந்த அனல் மின்னிலையம் தென் பகுதியில் மாவங்கை எனும் இடத்தில் நிறுவப்படவுள்ளது. இம் மின் நிலையத்தால் அப் பகுதியிலுள்ள சுற்றுப்புறங்கள், சூழல் பகுதிகள் பாதிக்கப்படும் என்பதால் அங்கு இதனை நிறுவுவதற்கு சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

● இலங்கையின் 12 மாவட்டங்களிலுள்ள அகதிமுகாம்களில் சுமார் பத்து இலட்சம் பேர் தஞ்சம் அடைந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பத்து அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 65 அகதி முகாம்களில் இரண்டு இலட்சம் அகதிகள் தங்கியுள்ளனர். மட்டக்களப்பு மேற்கில் படுவான் கரைப் பிரதேசத்தில் உள்ள உன்னிச்சை, ஆயித்திய மலைப் பிரதேசங்களில் இலங்கை இராணுவம் புதிதாக இரு முகாம்களை அமைத்துள்ளதால் இப்பகுதி மக்கள் அச்சம் காரணமாக இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

● சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஆயுதங்கள், உபகரணங்கள் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆயுதங்கள் விடுதலைப்புலிகளுக்கு வந்தததாகவும், கடந்த வருடம் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்களைக் கொலை செய்தவர்களில் ஒருவரின் பெயருக்கே இவை அனுப்பப் பட்டதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

மேற்படி கைப்பற்றப் பட்ட கொள்கலனில் கவச உடுப்புக்கள், 65 குதிரைவலு விசைப்படகு இயந்திரங்கள் 22, 45,000 மின்கலங்கள்(சிறு நிலக்கண்ணி வெடிகளுக்குப் பாவிக்கப்படும்), உயிர் காப்பு உடைகள், 81 நைலோன் வலைகள், 79 கூடாரத் துணிகள், விசைப் படகு இயந்திர உதிரிப் பாகங்கள், இராணுவ உடைகள் என்பனவாகும்.

● திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 500 தமிழ் இளைஞர்களைத் திரட்டி சிறீலங்காப் படையினருக்கு உதவியாக செயற்படப் போவதாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அறிவித்துள்ளது. வவுனியா நகரின் எல்லைப் பகுதிகளில் சிறீலங்கா இராணுவத்துடன் சேர்ந்து இவர்கள் தடைமுகாம்களிலும் சோதனை யிலீடுபட்டு வருகின்றனர்.

● திருகோணமலைக்கு விஜயம் செய்த ஜனாதிபதி பிரேமதாசா அங்கு அரச ஊழியர், அரசாங்க உத்தியோகத்தர் மத்தியில் உரையாற்றியிருந்தார். திருகோணமலை நகரில் கட்டுநாயக்கா போன்று ஒரு சுதந்திர வர்த்தக வலயத்தை உருவாக்கப் போவதாகவும், திருகோணமலைக்கும் கொழும்பிற்கும் இடையே நவீன நெடுஞ்சாலையொன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

● சர்வதேச சிறுவர் காப்பகத்தில் இலங்கையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின் படி பத்தாயிரம் சிறுவர்கள் விபச்சாரங்களிலும் ஆபாசத்திரைப்படர்கள் தயாரிப்பதிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் கூடுதலானோர் 8 வயது தொடக்கம் 15 வயது வரையிலான சிறுவர்கள் எனவும் இவர்களில் பெரும்பான்மையினர் வறுமையினாலும், ஏனையவர்கள் ஏமாற்றப்பட்டு வன்முறைகளினாலும் விபச்சார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இறந்த பின்பே "இல்லை"

ஜேர்மனியின் புகழ் பெற்ற
இலக்கியவாதியான பேர்தோல்ட் பிறெச்டின்
கதை
ஜேர்மனிலிருந்து தமிழுக்கு க.ஜெயா.

*சிந்தனையாளர் கொய்னர் அங்கு உரையாற்றுவதற்காக மேடையேறிக் கொண்டிருந்தார். தமது மாணவர்கள் மட்டுமல்லாமல் வழமைக்கு மாறாக அங்கு மேலும் பலரும் திரண்டிருந்தனர். அன்றைய தனது உரையின் தலைப்பை ஒரு கணம் நினைத்து அதன் மீதுள்ள பலரது கவன ஈர்ப்பையும் ஒரு கணம் நினைத்தார்.*

"கெவால்ற்! இப்போது எம்மையெல்லாம் சூழ்ந்திருக்கும் ஆபத்தான பேர்வழி. இதன் பிடியிலிருந்து எப்போ மீளுவது என்பதே நவகாலத்தின் புதிய சிந்தனையாகியுள்ளது. இதற்காக... "

*பேசிக்கொண்டிருந்த கொய்னர் தனக்கு முன்னால் இருந்த பலரும் திடீரென எழுந்து மண்டபத்தைவிட்டு மெல்ல மெல்ல நழுவுவதை அவதானித்துக் கொண்டார். காரணம் புரியாமல் சுற்றுமுற்றும் ஒருகணம் பார்த்தார்.*

*கெவால்ற் அவருக்குப் பின்னால் முறைத்துக் கொண்டு நின்றது. கொய்னருக்கு உடல்முழுக்க ஒருகணம் மின்சாரம் பாய்ந்து அடங்கியது.*

"என்ன பேசிக்கொண்டிருந்தாய் .... என்னைப்பற்றி ?" *கெவால்ற் கேட்டது.*

"கெவால்ற் என்ற மாவீரனே இன்று நீதியையும், நேர்மையையும் நெறிபிறளாது செல்ல வழி வகுத்துள்ளான் என்று கூறிக் கொண்டிருந்தேன்" *என்றார் கொய்னர்.*

*கெவால்ற்றின் முகத்தின் முறைப்பு நீங்கி புன்னகை பூத்தது. சற்று நேரத்தின்பின் கெவால்ற் அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விட்டான்.*

*விரிவுரை மண்டபத்தில் மீதமாயிருந்தவர்கள் மத்தியில் சலசலப்பு ஏற்படத் தொடங்கியது.* "கொய்னர் ஏன் இப்படி கெவால்ற்றை கண்டதும் தடம் புரண்டார்?" *மண்டபத்தில் இருந்தவர்கள் மத்தியில் சலசலப்பு*

**உருவக கதை**

*இன்னமும் அடங்கவில்லை. கொய்னர் மீண்டும்பேசத் தொடங்கினார்.*

"உங்கள் கேள்வி எனக்குப் புரிகிறது.நான் கெவால்ற்றை விட அதிககாலம் வாழவிரும்புகிறேன். அப்படி வாழ்ந்தால் தான் அவனை ஒழிப்பதற்கு என்னால் முடியும் என்றார்." *சலசலப்பு அடங்கியது. அவர் மேலும் தெரிவித்தார்.*

"உங்களுக்கு இப்போது நான் கதை ஒன்று சொல்ல விரும்புகிறேன்.....

சர்வாதிகாரம் எங்கும் வியாபித்திருந்த நேரமது. ஒருநாள் எக்க என்பவரின் வீட்டிற்கு ஒருவன் வந்திருந்தான். ஒரு பத்திரத்தை எக்கரிடம் கொடுத்து படித்துப் பார்க்கச் சொன்னான்.

"இவனது காலடிபட்ட வீடுகள்
அனைத்தும் இவனுக்குரியவை,
இவன் அழைக்கும் அத்தனைபேரும்
இவனது பணியாட்கள்.
இவன் விரும்பும் உணவுகளை நீ
கொடுக்கவேண்டும்."

இங்ஙனம்
பிரதிநிதி



ஓவியர்: ருடோல்ப் விலிஷ்டர்.

இதன்படி உன்னால் நடந்து கொள்ளமுடியுமா என்று எக்கவைப் பார்த்து வந்தவன் கேட்டான். எக்க பதில் எதுவும் சொல்லவில்லை.

அருகிலிருந்த நாற்காலியைக் காட்டி இருக்கச் சொன்னான். அவன் அருந்துவதற்காக தேநீர் எடுத்து வந்தான். அருகில் இருந்த மேசையில் இருத்தி உணவூட்டினான். கட்டிலில் சாய்ந்து படுக்கவும் ஏற்பாடு செய்தான். நித்திரையின்போது அவனுக்கு அருகில் இருந்து எக்க காவலும் காத்தான்.

காலங்கள் நகர்ந்து ஏழு வருடங்களாயின. பருத்த உடலுடன் கட்டிலில் சாய்ந்தபடி அவன் மீண்டும் கேட்டான்.

எனக்கு நீ தொடர்ந்தும் பணியாற்றுவாயா? " எக்க முன்னர்போல் இப்போதும் பதில் சொல்லவில்லை. கட்டிலில் சாய்ந்தபடியே அவன் எப்போதும் இந்தக் கேள்வியை மீண்டும் மீண்டும் கேட்டபடி இருந்தான்.

ஒரே இடத்தில் இருந்து வேண்டிய பண்டங்களைத் தின்று அவனது

www.tamilarangam.net

உடல் உப்பிப்போய் இருந்தது. உத்தாவிடும் தொழிலைத் தவிர அவன் வேறு எதுவும் செய்வதில்லை. தன்னால் இனிமேல் சுயமாக எதையும் செய்யமுடியும் என்ற நம்பிக்கை யையும் இழந்து வந்தான்.

ஒரு நாள் எக்க அவனது மூக்கில் தனது கையை வைத்துப் பார்த்தான். மூச்சைக் காணவில்லை. இனியும் சுவாசிக்க அவனால் முடியவில்லை; மாண்டுபோனான்.

எக்க சுறுசுறுப்படைந்தான். வேகமாகச் சென்று பிணத்தை அப்புறப்படுத்தினான். வீட்டையும் சுற்றாடலையும் சுத்தப்படுத்தினான். பெருமூச்சுவிட்டான்.

அவன் மீண்டும் மீண்டும் கேட்ட கேள்வியை நினைவுபடுத்திக் கொண்டான். வீட்டுக்கு வெளியே வந்தான். இல்லை.....இல்லை.....இல்லை.. ... எக்க உரக்க கத்தினான்."

*கொய்னர் கதையைக் கூறிவிட்டு மண்டபத்தில் நிறைந்திருப்போரை ஒருகணம் பார்த்துக் கொண்டார். மண்டபம் மௌனித்து நின்றது.*

*(கெவால்ற் (Gewalt) என்பதுஜேர்மனிய மொழியில் பயங்கரவாதம்)* ●

**கிழக்கு ஜேர்மன் மக்களின் ஆதரவு சி.டி.யூ.விற்கே!**

கிழக்கை மேற்குடன் இணைத்த பின்னர், ஒக்டோபர் 14ம் திகதி முன்னைநாள் கிழக்கு ஜேர்மனியின் 5 மாநிலங்களிலும், மேற்கின் ஒரு மாநிலத்திலும் நடந்த தேர்தலில் ஆளும் வலதுசாரிக்கட்சியான கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சிக்கு (சி.டி.யூ.) பழைய சோசலிச நாட்டின் மக்கள் தமது பாரிய ஆதரவை வழங்கி யுள்ளனர். இதன் மூலம் மாநில சபையில் இதுவரை சமூக ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையாக இருந்தது என்ற நிலை மாறி வலதுசாரிக் கட்சிகள் பலம் பெற்றுள்ளன. தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர் அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் கோருவதற்கான அடிப்படைச் சட்டத்தை மாற்றுவதற்கு கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சி பிரேரித்திருந்த போதிலும் பெரும்பான்மையில்லாததால் தோல்வி கண்டது. தற்போது முன்னைய சோசலிச நாட்டு மக்களின் வாக்குக்களினால் இது போன்ற சட்டங்களை மாற்றுவதன் மூலம் அகதிகளை ஜேர்மனிக்கு வரவே செய்ய முடியாமல் சட்டம் இயற்றும் நிலை ஏற்பட்டுள்ளது. ●

# பாலைவனத்தில் போர் மேகங்கள்



— இ.சுதாகர். —

கிழக்கு ஜேர்மனி மேற்குடன் இணைக்கப் படும் வரை பாதுகாப்பு(போர்) அமைச்சராக இருந்தவரும், பாதிரியாருமான எப்பல்மானை பத்திரிகையாளர்கள் பனிப் போரின் பின்னர் ஜேர்மன் இராணுவம் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் என்னவென வினாவிய போது அவர் "... எங்களுக்கு இதுவரையில் இருந்து வந்த அச்சுறுத்தல்கள் இல்லாத போதிலும் இனிமேல் தூர கிழக்கு நாடுகளிலிருந்து உண்டாகும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இராணுவம் அவசியமானதே" என்றார்.

சதாம் குசைனுக்கு நன்றி. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் இனிமேல் என்ன செய்வது என்று தெரியாமல் திணறிக் கொண்டிருந்த இராணுவ அதிகாரிகளின் பிரச்சினையைக் குறைந்த பட்சம் தற்காலிகமாகவது தீர்த்து விட்டார். அதேநேரம் ஏகாதிபத்தியத்திற்கு போட்டி எதுவும் இல்லாதிருந்த வேளையில் அந்த வெற்றிடத்தை நிரப்பி ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளின் கதாநாயகனாக வளர்வதில் வெற்றியும் பெற்றுவருகின்றார்.

*மேற்கத்தைய நாடுகளுக்கு கடாபி, கொமெய்னி, கஸ்ட்ரோ, நொரியேகா, அரபாத் ஆகியோரை மிஞ்சும் ஒரு புதிய வேதாளம் கிடைத்து விட்டது. "பைத்தியக்காரன்", "பாக்தாத்தின் கிட்லர்", "விசரன்" என ஒவ்வொரு பத்திரிகைகளும் தமது மனதுக்கிசைந்த மாதிரி சதாம் மீது பல்லவி பாடி வருகின்றன.*

*இவை அனைத்தையும் மீறி சதாம் குசைன் நிதானமாக அரசியல் சதுரங்கம் ஆடி வருவது அதன் மறுபுறத்தில் எந்தவிதப் பைத்தியக்காரத் தனத்தையும் தெரிவிக்க வில்லை. 1970ம் ஆண்டு "கறுத்த செப்டம்பரின்" போது பலஸ்தீன இயக்கத்தை ஜோர்தானிய இராணுவம் அழிக்கும் போது அவ் இயக்கத்தின்*

எதிர்பார்ப்புக்களை உடைக்கும் வகையில் ஜோர்தானியாவின் பக்கம் நின்றதையும், பலஸ்தீன தலைவர்களை சிரியாவிலிருந்து தனது பக்கம் வென்றெடுக்க பல தலைவர்களை கொலை செய்ததையும் மறந்து இன்று பலஸ்தீனிய விடுதலை இயக்கங்கள் ஈராக்கை முழுமையாக ஆதரித்து வருவதுடன் தேவை ஏற்படின் போராட்டத்திலும் இறங்கத் தயாராக இருக்கின்றன.

சதாமின் பாத் கட்சியை வளர்ப்பதற்காக ஆரம்பத்திலிருந்தே அக் காலத்தில் பலமாக இருந்த ஈராக்கிய கம்யூனிசக் கட்சியையும் அழிக்கத் தயங்காத சோவியத் யூனியன் இன்று எது வித நிலைப்பாடும் இல்லாது தனது ஏகாதிபத்திய எதிர்ப்பு எனும் அங்கீகாரத்தை ஈராக்கிடம் இழந்து வருகின்றது. அராபிய நாடுகளில் நம்பிக்கை நட்சத்திரமாக சதாம் குசைன் வளர்ந்து வருவதையும் அமெரிக்கத் தலையீட்டை தனது பக்கம் சாதகமாக்கி வருவதையும் யாராலும் தடுக்க முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது.

இன்று அரசியல் வானில் புதிய கொந்தளிப்பையும், பரிமாணத்தையும் ஏற்படுத்தி வரும் இந்த வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கு ஈராக்கின் வரலாற்றையும் பாத் கட்சியின் ஆட்சிமுறையையும் சற்றுப் பின்னோக்கிப் பார்க்க வேண்டியது அவசியமானது.

## இராணுவ ஆட்சியல் ஸ்திரம் பெற்ற
## ஈராக்

நீண்டகாலமாக மத்திய கிழக்கில் ஒரு ஸ்திரமற்ற நாடாக இருந்து வந்த ஈராக் "ஆட்சி புரிய முடியாத" ஒரு நாடாகவே கணிக்கப் பட்டு வந்தது. 1933 ல் அந்நாட்டை ஆட்சி புரிந்த மன்னர் பைசல் தனது மரணத்திற்கு சிறிது காலத்திற்கு முன்னர் ஈராக்கிய மக்கள் என எதுவும் கிடையாது எனவும், ஈராக்கியர்கள் தமக்குள் எவ்வித பிணைப்பையும் கொண்டிராதவர்கள் எனவும் எழுதியிருந்தார். இவ் விளக்கமானது முற்றும் பிழையானதன்று.

20% ஈராக்கியர்கள் ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை தமது தனித்துவத்துக்காகப் போராடி வரும் குர்தில்தான் மக்களாவர். 55% வரையான ஈராக்கியர்கள் பெரும்பாலும் தென் பகுதியில் வாழும் ஷீட் அராபியர்களாவர். இந்த ஷீட் சமூகத்தின் பெரும்பான்மையானவர்களை ஈரான், ஈராக்குக்கு எதிரான யுத்தத்தின் போது தனது பக்கம் இழுக்க முயன்று ஓரளவு வெற்றியும் கண்டிருந்தது. மொத்தச் சனத் தொகையின் கால்வாசியினரான சுன்னி முஸ்லிம்கள் நாட்டை தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பது நாட்டின் ஸ்திரமின்மைக்கு மேலும் ஒரு முக்கிய காரணமாகும். எண்ணைய் விளையும் பகுதியான கிர்குக் பகுதியில் ஒரு சிறிய வீத துருக்கியினர் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வேறு பல இன, மதங்களைச் சார்ந்த மக்களைத் தன்னகத்தே கொண்ட, ஈராக் அரசியல் ரீதியாகவும் ஸ்திரமின்மையையே கொண்டிருந்தது. மத்திய கிழக்கில் முதன் முதலாக(1936) இராணுவப் புரட்சி நடைபெற்ற நாடு ஈராக்காகும். அத்துடன் 1936ம் ஆண்டின் பின்னர் ஈராக்கில் நடைபெற்ற அத்தனை ஆட்சி மாற்றமும் இராணுவத்தின் உதவி யுடனேயே ஏற்பட்டது. பாத் கட்சி இரண்டாவது தடவை 1968ம் பதவிக்கு வரும் வரை எந்த அரசாங்கமும் ஒரு சில வருடங்களுக்கு மேல் நாட்டை ஆட்சி செய்யமுடியவில்லை. இதைவிட 50, 60ம் ஆண்டுகளில் நிலப் பிரபுத்துவ நாடான ஈராக்கினுள் கம்யூனிசக் கட்சி பலம் வாயந்ததாக விளங்கியதும் குறிப்பிடத்தக்கதாகும்.

60ம் ஆண்டுகளின் இறுதியில் பாலஸ்தீன- இஸ்ரேலிய பிரச்சினைகளின் பின்னணியில் அரபிய உலகில் சக்திவாய்ந்த, பெரிய அரபிய இராணுவம் ஒன்றின் அவசியம் உணரப்பட்டது. பாத் கட்சி இரண்டாவது தடவை பதவிக்கு வந்தவுடன் அரபிய உலகிலேயே இல்லாத வகையில் "அரபிய-சோசலிச" தத்துவத்துடனும் சோவியத் யூனியனுடன் நல்லுறவைப் பேணி தனது எண்ணெய்குதங்களைத் தேசிய மயப்படுத்தியதும் ஈராக்கை முற்போக்கு நாடாக கணிப்பிட வகை செய்தது.

பாத் கட்சி சமூக மாற்றத்தை முன்னோக்கி வேலைத்திட்டங்களை கைவிட்டு ஆரம்ப முதலே "ஸ்திரப் படுத்தல்", "கட்டியெழுப்புதல்", "பெரிய தேசியத்தை உருவாக்குதல்" என்பவற்றை முன்னிட்டே நடவடிக்கைகளை மேற்கொண்டது. 20 வருடகாலத்திற்குள் சதாம் குசைனின் பாத் கட்சி இப் புணியை பெரிதளவு நிறைவேற்றியே உள்ளது. இராணுவம் "ஸ்திரமாக்கப் பட்டுள்ளது", பெரிய இராணுவம் "கட்டியெழுப்பப் பட்டுள்ளது". எதிர் கட்சிகள் அனைத்தும் செயலிழக்கப் பட்டுள்ளன.

இவ்வளவும் மிகப் பெரிய அளவிலான அடக்குமுறையினுடாகவே நிறைவேற்றப்பட்டது. நாடு "பாத்" மயமாக்கப்பட்டது. கட்சிக்கு அடி பணிய மறுக்கும் இராணுவ அதிகாரிகள் உடனுக் குடனேயே தூக்கிலிடப்பட்டனர். 1979ம் ஆண்டு ஜனவரியில் 6 கிழமைக்குள் 1913 கம்யூனிசக் கட்சி உறுப்பினர்கள், 2000க்கு மேற்பட்ட குர்தில்தான் வீரர்கள் கொலை செய்யப் பட்டமையும், குவைத்தை ஆக்கிரமிப்பதற்கு சில தினங்களுக்கு முன்னர் இத் திட்டத்திற்கு எதிராக இருந்த 120 இராணுவ அதிகாரிகள் கொலை செய்யப்பட்டதும், இதற்கு சில உதாரணங்களாகும். 20 வருட பாத் ஆட்சியின் பின்னர் 1958ம் ஆண்டு மன்னராட்சியை மாற்றிய போது இருந்த ஜனநாயக தன்மை முற்று முழுதாக களைந்தெடுக்கப் பட்டுள்ளது.

70ம் ஆண்டுகளில் ஸ்திரப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்குப் பொருளாதாரம் ஒரு தடையாக இருந்த போதிலும் 73/74 களில் உலக சந்தையில் எண்ணெய் விலை திடீரென அதிகரித்தது பாத் கட்சிக்கு வாய்ப்பாகப் போனது. மேலதிகமாகக் கிடைத்த பணத்தின் மூலம் நாட்டில் சமூக, பொருளாதாரத் திட்டங்களை அமுல் படுத்தி தனது செல்வாக்கை அதிகரித்துக் கொண்டது.

1980 ம் ஆண்டு ஈராக் ஈரானுடன் போரை ஆரம்பித்தது. இதற்கான எத்தனையோ காரணங்கள் கூறப்பட்ட போதிலும் கீழ் வரும் காரணங்கள் முக்கிய பங்கை வகித்ததாகக் கருதப்படுகிறது.


* 55% வீதமான ஷீட் முஸ்லிம்கள் ஈரான் புரட்சியினால் ஈர்க்கப் பட்டு ஈராக்கிலும் அதை இறக்குமதி செய்ய முற்படுவதை தடுக்கவும்,

* 1975ம் ஆண்டு குர்தில்தான் போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஈரான் ஷா உதவி செய்ததற்கு பரிசாக ஷட்-எல்-அராப் தீவை கொடுக்க வேண்டியிருந்ததால், அதைத் திருப்பிப் பெறுவதற்கும்,

* ஈரானின் பெரிய எண்ணெய் வளமுள்ள மாகாணமான குஸிஸ் தானிலுள்ள அராபியரை "விடுதலை" செய்வதன் மூலம் அவ் எண்ணெய் குதங்களைக் கைப்பற்றுவதற்கும்,

* புரட்சி மூலம் பலவீனப் பட்டிருந்த ஈரானுடன் ஒரு மின்னல் யுத்தத்தை மேற்கொள்ளுவதன் மூலம் மத்திய கிழக்கில் பலம் வாய்ந்த சக்தியாக மாறுவதற்கும்

இப்போர் மேற்கொள்ளப்பட்டதாகக் கருதலாம்.




ஈரான் மீது ஈராக் மேற்கொண்ட தாக்குதல் மேற்கத்தைய நாடுகளுக்கு மனமகிழ்ச்சியை அளித்ததால் அதை ஒரு ஆக்கிரமிப்பு முயற்சியாகவோ அன்றி பைத்தியக்காரத் தனமாகவோ கருத முயலவில்லை. அவை ஈராக்கிற்கு உதவி செய்யவே முன்வந்தன. ஈரானுக்கு எதிரான இப் போர் மிகச் சிறந்த முறையில் திட்டமிடப் பட்டு மேற்கொள்ளப் படாததால் அது ஒரு மின்னல் யுத்தமாக இருக்கவில்லை. மிக விரைவிலேயே ஈராக் போரில் தோல்விகளைச் சந்திக்க வேண்டியதுடன் தற்பாது காப்பு நிலைக்குப் போக வேண்டி வந்தது.

சதாம் நினைத்தது போல குஸிஸ்தானிலுள்ள அராபியர்கள் இப் போரை "விடுதலையாக" கருத வில்லை. ஈரானிய இராணுவம் மிக விரைவிலேயே பலவீனப் பட்டு விடும் என எதிர்பார்ததற்கு எதிர்மாறாக முல்லாக்கள் தம்மை ஸ்திரப் படுத்திக் கொண்டதுடன் உள் நாட்டுப் பிரச்சனைகளை இப் போரின் மூலம் தவிர்த்துக் கொண்டனர். அத்துடன் ஈராக்கிய இராணுவத்திற்கு அந் நேரம் யுத்தம் எதிலும் அனுபவம் அற்றிருந்தது.

இந்நிலைமைகளின் காரணமாக 1986ம் ஆண்டு வரை ஈராக்கிய இராணுவம் தற்பாதுகாப்பு நிலைமைக்குத் தள்ளப்பட்டதுடன் ஈரானிடம் பாவோ குடாவையும் இழந்தது. இதன் மூலம் ஈராக்கிற்கு வளைகுடாவிற்கான ஒரே வழியும் அடைபட்டுப் போனது. அந் நேரம் குவைத் மட்டும் பெரிய மனத்துடன் ஈராக்கிற்கு தமது துறைமுகத்தை வழங்கி உதவி செய்திருக்காவிடில் ஈராக்கின் நிலை மிகவும் கடினமாக இருந்திருக்கும்.

பாவோ குடாவை இழந்தது ஈராக்கிற்கு தோல்வியாக இருந்த போதிலும் அது ஒரு நீண்ட நாளைய பிரச்சனைக்கான தீர்வையும் காட்டியது. அதுதான் குவைத்.

**ஈராக் ஈரானுடனான யுத்தத்தின்பின் தன்னை வலுப்படுத்திக் கொண்டது.**

அதேநேரம் 1986ம் ஆண்டு யுத்தத்தில் ஒரு திருப்புமுனையாகவும் அமைந்தது. ஈராக்கிய தலைமை இராணுவத்தை முற்று முழுதாகப் புனரமைக்க ஆரம்பித்தது. இராணுவத்திற்கு ஆட்களையும், தளபாடங்களையும் பெரிய அளவில் சேகரித்து இராணுவ தலைமையையும் சீர்படுத்தியது. இந்த பெரிய அளவிலான திட்டமிடப்பட்ட நடவடிக்கையின் பலன் 1988ம் ஆண்டு வெளிச்சத்திற்கு வரலாயிற்று. 1988ம் ஆண்டு ஏப்ரலிலிருந்து ஒகஸ்ட் வரையிலான ஈராக் ஈரான் மீது ஐந்து தடவைகள் மேற்கொண்ட பெரியளவிலான தாக்குதலின் விளைவாக ஒகஸ்டில் ஈரான் முற்றுமுழுதாக செயலிழக்குமளவிற்கு வந்தது. இவ்வேளையில் கொமெய்னி "கசப்பான சமாதானப் பானத்தைக் குடிப்பதற்குத்" தயாரானார்.

உண்மையிலேயே இந்நேரம் ஈராக்கின் வெற்றியுடன் ஈரான்-ஈராக் யுத்தம் முடிவுக்கு வந்து விட்டது.

* தேசிய அளவிலே அனைத்து வளங்களையும் உபயோகித்து இராணுவத்தைக் கட்டியெழுப்பியதும், யுத்தத்தின் போது இராணுவத் தலைமையில் மாற்றங்களை ஏற்படுத்தி மத்திய கிழக்குப் பிரதேசத்தில் (இஸ்ரேலை தவிர்ந்த) மிகப் பெரிய இராணுவத்தை உருவாக்கியமையும்,

* சிரியா, லிபியா தவிர்ந்த அனைத்து அராபிய நாடுகளும் யுத்தத்தின் போது ஈராக்கிற்கு அளித்த உதவிகள். இப் பிரதேசத்திலிருந்து 30,000 கோடி அமெரிக்க டொலர் காசாகவும், குவைத்தின் துறைமுகத்தைப் பாவிக்கக் கிடைத்த வசதி, ஜோர்தான் வீதிகள், சவுதி அரேபியா எண்ணெய் குழாய் வழிகள் என்பன பாவித்தவை, மில்லியன் வரையிலான எகிப்து தொழிலாளிகளின் உழைப்பு என்பன,

* பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா, சோவியத் யூனியன் என்பவற்றின் நேரடியான அல்லது மறைமுகமான உதவிகள்.

போன்றவை ஈராக்கின் ஈரான் மீதான வெற்றிக்குப் பெருமளவு உதவி செய்தன.

மேற்கைத்தைய நாடுகளினால் ஈராக் தம்மைப் பயமுறுத்தும் ஈரானிய முஸ்லிம் பயமுறுத்தலுக்கு எதிரான ஒரு மாற்று சக்தியாகவே கணிக்கப்பட்டது. இதனால் மேற்கத்தைய நாடுகளினால் ஈராக் ஆயுத ரீதியில் பலமாக உதவி செய்யப்பட்டது.

ஈரானுடனாக யுத்தத்தின மூலம் ஈராக் பல வழிகளிலும் தன்னை ஸ்திரப் படுத்திக் கொண்டது. அயல் நாடுகளின் ஆதரவு, மேற்கத்தைய நாடுகளினது உதவி, சோவியத் யூனியனின் பக்கபலம் இவை எல்லாவற்றின் மூலமும் தன்னைப் பலப்படுத்திக் கொண்டதுடன், உள் நாட்டுப் பிரச்சனைகள் அத்தனையையும் முறியடித்தது.

தனக்கு எதிராகப் போராடிய குர்திஸ் போராளிகளை (மசூட் பார்சானியின் குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சி) ஈரானுக்கு எதிராக துருப்புக்களாகப் பயன்படுத்தி அவர்களைப் பலவீனப் படுத்தியதன் பின்னர் குர்திஸ்தானிற்கு இராணுவத்தை அனுப்பி அங்குள்ள எதிர்ப்புக்களை முறியடித்தது. குர்திஸ்தானின் எதிர்ப்புக்களை முறியடிக்க மனிதாபிமானமற்ற முறையில் இராசயன ஆயுதங்களை உபயோகித்தது உலகம் அறிந்ததே. ஆயினும் இத்தகைய நடவடிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈராக் அதிபர் சதாம் குசைன்



சவூதி அரேபிய மன்னர் பாட்



அமெரிக்க ஜனாதிபதி ஜோஜ் புஷ்

கைகளை மேற்கொண்டு ஈராக் அராபியப் பிரதேசத்தில் பலமுள்ள நாடாக மாறியது.

## ஈரான் குவைத்தை விழுங்கியதேன் ?

தற்போதுள்ள ஈராக்கிய தலைமை பெரியளவில் மேற்கத்தைய நாடுகளினால் பயிற்றப் பட்ட பல வல்லுனர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மேற்கத்தைய நாடுகளின் மனிதாபிமானமற்ற, லாப, நட்டக் கணக்கு முறையில் அரசியல் செய்வது எவ்வாறு என்பதிலும், அரசியல் லாபத்திற்காக எத்தனை லீட்டர் இரத்தம் சிந்த வேண்டும் என்பதை கணக்கிடும் வல்லமை கொண்ட அரசியல் ஆலோசர்களை தன்னகத்தே வளர்த்துக் கொண்ட சதாம் குசைனின் நடவடிக்கைகளை வேறொரு மேற்கத்தைய நாடு மேற்கொள்ளுமாயின் அது ஒரு சிறந்த கணிப்பிடப்பட்ட முயற்சியாகவே பாராட்டப் பட்டிருக்கும். அமெரிக்கா கிரெனடா மீதோ அன்றி பனாமா மீதோ நடவடிக்கைகளும், பெரிய பிரித்தானியா போக்லந்தின் மீதான ஆக்கிரமிப்பும் இதே வகையிலான கணிப்பின் அடிப்படையிலேயே ஏற்பட்டது.

ஈராக்கின் கணிப்பிடும் இந்த திறமைக்கு குவைத் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பு ஒரு உதாரணமாகும். முதலாவதாக குவைத்தின் மூலம் ஈராக்கிற்கு பாரசீகக் குடாவிற்கான வழி நேரடியாகக் கிடைக்கிறது. குவைத்தை இணைத்த பின்னர் ஈராக்கை பாரசீகக் குடாவிலிருந்து துண்டிப்பது மிகவும் கடினமானது.

இரண்டாவதாக குவைத் ஒரு மிகப் பெரிய பணக்கார நாடு. உலகின் மூன்றாவது பெரிய எண்ணெய் குதங்களைக் கொண்ட நாடு குவைத் ஆகும். குவைத்தும் ஈராக்கும் சேர்ந்து உலகில் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெயை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறும். அடுத்ததாக ஈராக் ஈரானுடன் மேற்கொண்ட 8 வருட யுத்தத்தின் விளைவாக அயல் நாடுகளிடம் 30,000 கோடி டொலர் கடன் பட்டுள்ளது. இதில் குவைத்திடம் மட்டும் 10,000 கோடி டொலர் ஆகும். குவைத்தைக் கைப் பற்றியதுடனே ஈராக் குவைத்திற்கு பட்ட கடனும் தீர்க்கப் பட்டு விட்டது.

பெப்ருவரி மாதம் ஈராக் இஸ்ரேலை இராசயன ஆயுதங்களாலும், ரொக்கட்டுக்களாலும் பயமுறுத்திய பின்னர் குவைத்தை ஆக்கிரமித்ததன் மூலம் சதாம் குசைன் அரபிய உலகில் தன்னைப் பலசாலியாக திறம்பட நிருபித்துள்ளார். சில அரபிய நாடுகள் இதன் மூலம் அச்சுறுத்தலுக்குள்ளான போதிலும் பெரும்பான்மையான அரபியர்கள் அரபிய உலகில் ஒரு பலசாலியையே விரும்பி நிற்கின்றனர். சில அரபிய நாடுகள் சதாம் குசைனின் பெரிய இராணுவத்தினால் பயமுறுத்தலுக்குள்ளானாலும், அந் நாடுகளில் உள்ள மக்கள் ஈராக்கை ஆதரிப்பதால், உள்நாட்டில் தமது செல்வாக்கை இழக்காதிருக்க குறைந்த பட்சம் சதாமிற்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்க முடியாத நிலைக்கே தள்ளப்படுவர்.

இறுதியாக சதாம் குசைன் தனது ஆக்கிரப்பு நடவடிக்கையின் செலவை குறைத்திருக்கும் விதம் மிகவும் சுவாரஸ்யமானது. தனது ஆக்கிரமிப்பு எதிர் நடவடிக்கைகளை அவர் எதிர்பார்த்த போதிலும், அரபிய உலகம் ஈராக்கிற்கு எதிராக எதுவித இராணுவ ரீதியான நடவடிக்கையும் எடுப்பதற்கு சாத்தியமில்லை. ஐக்கிய அமெரிக்கா இதற்கான முயற்சிகளில் இறங்கும் என எதிர்பார்த்தாலும், அவை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளேயே இருக்கும். 80ம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்கா கிரெனடா, நிகராகுவா, லிபியா, பனாமா போன்ற தம்மைப் பாதுகாக்க முடியாத சிறிய நாடுகளின் மீதே இராணுவச் செயற்பாடுகளை மேற்கொண்டது. 1983 இல் சிரியாவின் உதவியுடன் அமெரிக்கத் தளங்கள் லெபனானில் சேதமாக்கப் பட்ட போது அமெரிக்கா கையாலாகாத் தனத்துடன் பார்த்துக் கொண்டிருந்தது. ஈரானுக்கு எதிராக இராணுவத்தைப் பாவிக்க முடியாத நிலையிலேயே வாஷிங்டன் இருந்தது. இந் நிலையில் நவீன இராசயன, உயிரியல்(biological) ஆயுதங்களும், 10 இலட்சம் துருப்புக்களும் கொண்ட ஈராக்கிற்கு எதிராக இராணுவ ரீதியாக மோதுவதற்கு அமெரிக்கா ஒரு போதும் முயலாது. பொருளாதாரத் தடை நீண்ட காலத்திறகு மேற்கொள்ளுவது சிரமமானது. அத்துடன் நீண்ட காலத்திற்கு ஈராக்-குவைத்தின் எண்ணெய் இல்லாமல் மேற்கு நாடுகளின் தொழிற்சாலைகள் இயங்குவதும் கடினமாகும்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானம், மொரக்கோ, பாகிஸ்தான், பங்களாதேஷ், சிரியா உட்பட பல நாடுகள் தமது துருப்புக்களை மத்திய கிழக்குக்கு அனுப்பி வைத்தல் என நிலைமை தனக்கு எதிராகத் திரும்பி வர, ஈராக்கிய புரட்சிகரக் குழுவின் தலைவர் சதாம் குசைன் அரசாங்கங்களை மீறி அனைத்து


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம்களையும் ஈர்க்கும். "ஏகாதிபத்தியத்திற்கும், சியோனிசத்திற்கும், அவர்களது காலை நக்கிக் கொண்டிருக்கும் அரபிய துரோகிகளுக்கும் எதிரான புனித யுத்தத்திற்கான" அழைப்பு விடுத்தார். அரபு உலகத்தின் ஒற்றுமை, இல்லாமைப் பாதுகாத்தல், பலஸ்தீனாவின் விடுதலை, மேற்கத்தைய நாடுகளின் சுரண்டலுக்கு எதிராக எண்ணெயை ஆயுதமாகப் பாவித்தல் என சதாமின் கச்சிதமான கோரிக்கைகள் பல அரபியர் அடிமனத்தை ஆக்கிரமித்துக் கொண்டது. இதை விட சதாம் திடீரென மூன்றாம் உலக நாடுகள் எண்ணெயை தன்னிடம் பணமின்றிப் பெற்றுக் கொள்ளலாம் எனக் கூறியிருப்பதும் அவரின் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டே.

## வளைகுடாவில் யுத்தம் மூளுமா ?

ஈராக் தனது சொந்த ஆர்வம் கருதியே நடவடிக்கைகளை மேற்கொள்வதால் சவுதி அரேபியா மீதோ, துருக்கி மீதோ அன்றி இஸ்ரேல் மீதோ ஒரு போதும் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப் போவதில்லை. அப்படியான ஒரு ஆக்கிரமிப்பின் மூலம் ஈராக் தோல்வியையே தழுவும் என்பதுடன், தற்போது ஆக்கிரமித்த குவைத்தைக் கட்டிக் காப்பதற்கு ஈராக்கிற்கு ‹போதியளவு சக்தியும் நேரமும் வேண்டியிருக்கும்.

ஈராக்கிற்கு ஐக்கிய அமெரிக்காவுடன் ஆயுத மோதலில் இறங்குவதற்கு எவ்வித ஆர்வமும் இல்லாததால் அமெரிக்கா விரும்பும் எவ்விதமாக தூண்டுதல் நடவடிக்கையிலும் ஈராக் இறங்கப் போவதில்லை.

அதே நேரம் ஐக்கிய அமெரிக்காவினது ஆர்வமும் வளைகுடா நெருக்கடியைப் பயன்படுத்தி தனது காலை அங்கு பதிய வைத்து மத்திய கிழக்கு எண்ணெயைச் சுரண்டுவதும், தனது ஆதிக்கத்தை வலுப்படுத்திக் கொள்வதுமேயாதலால் ஈராக்குடன் மோதலில் தேவையில்லாமல் ஈடுபடப்போவதில்லை. பாலைவனத்தின் வெயில் கொடுமையில் வாடி வதங்கும் அமெரிக்க இராணுவம் ஈராக்கின் ஒரு மில்லியன் துருப்புக்களுக்கு எதிராக இலகுவான வெற்றியை எதிர்பார்க்க



போருக்குத்தயார்...

முடியாது. அத்துடன் பல நாடுகள் தமது துருப்புக்களையும் அங்கு கொண்டு சென்று குவித்துள்ளதால் இராணுவ நடவடிக்கைகள் பெருமளவில் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. அமெரிக்க இராணுவத்திற்கு ஜெனரல்களாக ஒரே நேரத்தில் சவுதி மன்னரும், சுவார்ச் கொப்(Schwarz Kopf) உம் இருப்பது ஒரு புதிய விடயம். சவுதிக்காக தமது உயிரைப் பணயம் வைப்பது போர் தொடங்கும் போது அமெரிக்கத் துருப்புக்களுக்கு பிரச்சனையாகவே இருக்கும்.

வெறுமனே பொருளாதாரத் தடை மூலம் ஈராக்கை வெல்லுவதற்கும் நீண்ட காலம் தேவைப்படும். இக் காலத்திற்குள் சதாம் குசைன் துருக்கி குர்திஸ்தான் கொரில்லாக்களுக்கு ஆயுத உதவி செய்தும், சவுதி மதவெறியர்களை தமது பக்கம் இழுப்பதன் மூலம் சவுதியை ஸ்திரமின்மைப் படுத்துவதன் மூலமும், பலஸ்தீனியர்கள் மூலம் சர்வதேசிய ரீதியில் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலமும் நிலைமையை வேறுவிதமாக்க முடியும்.

ஜெருசலத்தில் அண்மையில் நடந்த சியோனிஸ்டுக்களின் மிலேச்சத் தனமான கொலைவெறிச் சம்பவம், எகிப்து பாராளுமன்ற சபாநாயகர் கொலையின் மூலம் எகிப்தின் உள்நாட்டு ஸ்திரமின்மை என்பன அரசியல் ரீதியில் ஈராக்கிற்கு சாதகமான அம்சங்களே.

ஈராக் வளைகுடா யுத்த சூதாட்டத்தில் பல பேருக்கு எதிராக விளையாடினாலும் பல துரும்புகளை தானே வைத்திருப்பதால் நிதானம் தவறாமல் விளையாடுகிறது. ●

## இலங்கையில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வெளிநாட்டவர் கைது.

இலங்கையில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் 32 பேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தங்குவதற்காக வழங்கப்பட்ட அனுமதிகாலத்தைவிட மேலதிகமாக சட்டவிரோதமாகத் தங்கியதற்காகவும்,அனுமதியின்றி சட்டவிரோதமாக தொழில் செய்ததற்காகவும் இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் உல்லாசப் பிரயாணிகளாகவே வந்தவர்கள்.கைதுசெய்யப் பட்டவர்களில் பங்காளதேசத்தவர்கள் 21பேரும்,இந்தியர்கள் 5பேரும், ஜேர்மனியர் ஒருவரும், தாய்லாந்து ஒருவரும் அடங்குவர். மாதமொன்றுக்கு 60,000 வெளிநாட்டவர்கள் உல்லாசப் பிரயாணிகளாக வருவதால் சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருப்பவர்களை கைதுசெய்து தடுப்புக்காவலில் வைக்கும்படி குடிவரவு,குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை 350 வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் நிரந்தரமாகத் தங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிதாய் வளரும் நாடுகள்

*RACE & CLASS* என்ற ஆங்கில சஞ்சிகையில் (ஏப்ரல் 1990) திரு. ஏ.சிவானந்தன் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் ர.சுந்தரம்

நூல் ஆசிரியர் திரு ஏ.சிவானந்தன் ஓர் இலங்கையராவர். இவர் பலகாலமாக லண்டனில் வாழ்ந்து பல கட்டுரைகளைத்தந்துள்ளதுடன், இடதுசாரிகள் வட்டத்தில் பாரிய தாக்கத் தையும் ஏற்படுத்தியிருப்பவர்.

அதிலும் மூன்றாம் அணி நாட்டு மக்களது துன்பங்களையும் இன்னல் களையும் கவனியாது வெறும் வேதாந்தம் பேசிக் கழிக்கும் சில வட்டாரங்கள் போலல்லாது புதிய பரிணாமம் கொடுக்கும் ஆற்றலுள்ள தாரிக் அலி (Tariq Ali) போன்ற ஆசிரியர்களது வரிசையில் இவரும் அடங்குவார்.

மார்க்ஸிஸம் என்பதை ஏதோ சமயத்தின் மூல நூலாக அல்லாது உலக சமுதாயத்தின் நிலைமைகளை நிலைப்பாடுகளை ஆராயும் கருவியாகக் கைக்கொண்டு இவர் வடிக்கும் கட்டுரைகள், சுலோகங்களை மட்டும் தாங்கி நின்று சித்தரிப்போரை அடையாளம் காட்டுவதுடன் நின்று விடாது, ஆங்கிலத்தில் கவித்துவம் மிக்கதாய் அமைந்து வழமையான போர் அடிக்கும் பாணியிலிருந்து வாசகர் களை விடுதலையும் செய்கிறது.

இன்றோ புதிய உற்பதிமுறையின்படி, தொழிற்சாலை என்பது வழமையாக நாம் கண்முன் கொண்டிருக்கும் கருவுருவத்தைப் போல் ஒரு பொருளை முற்று முழுவதாக தயாரித்துத் தரும் பெரும் ஆலை அல்ல. இன்று அப்படியான தொழிற்சாலை பல கூறுகளாக்கப்பட்டு, உலகின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டு வருகின்றன. ஒரு ஆலையினுள்ளேயே அங்கமங்கமாக இணைத்துப் பொருத்தும் வரிசைகள் இன்று உலகளாவிய வரிசையாக இலத்திரனியலைப் பார்க்கும் போது கலிபோனியாவின் அல்லது ஸ்கொட்லாந்தின் சிலிக்கன் பள்ளத்தாக்குகளில் தொடங்கி தைவான், சிறிலங்கா, சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களிலுள்ள ஏற்றுமதிக்கான இறுதி ஏற்பாடுகளைச் செய்யும் ஸ்தலங்கள் வரை (Export Processing Zones- EPZ) பரவலாக்கம் செய்யப்பட்டுள்ளது. மோட்டார் வண்டி உற்பத்தியைப் பார்க்கின் அதனது அங்கங்கள் பல பாகங்களிலும் செய்யப்பட்டு, பின்னர் எந்த நாடுகள், எந்த நகரங்களில் எவ்வளவு தேவைப்படுகின்றனவோ அதற்கேற்ற வழியில் அங்குமிங்குமாக ஒருங்கிணைக்கப்பட்டு பயணம் செய்து வந்து சேர்கின்றன.

இவ்வகையில் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ப உற்பத்தி செய்யும் வழிமுறை ஆலைகளின் இயந்திரங்கள்- கருவிகளை மாற்ற வேண்டிய அவசியத்தை தவிர்த்து, சந்தைக்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்ய மூலதனத்திற்கு உதவுகிறது. இவ் வழிமுறையை ஏற்றுக்கொண்ட போயிங் விமான உற்பத்தி நிறுவனம், முன்னர் போலல்லாமல் ஒன்றரை நாட்களில் ஒரு 737 விமானத்தை உற்பத்தி செய்யக்கூடியதாயிற்று. ஒரு உற்பத்திப் பொருளிலிருந்து இன்னுமொன்றிற்கு மிகவும் குறைந்த மூலதனத்துடன் மாற்றிக்கொள்ள உதவியுள்ள இவ்வழிமுறை மேலும் மேலும் பெரும் பல்தேசிய நிறுவனங்களால் ஏற்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

## முன்னேறிய நாடுகளின் புதிய சூட்சுமங்கள்

இவ்வகையில் உலகளாவிய தன்மையைப் பேணும் மூலதனத்தையும், தொழிலின் பிரிவுகளையும் மட்டும் அவதானித்துப் பார்த்திடுவதால், இப் புதிய உற்பத்திமுறையின் தன்மைகளையும், கூடவே கைகோர்த்துச் செல்லும் ஏகாதிபத்தியத்தினையும் கண்டுகொள்ள முடியாது. கூடவே, உற்பத்திப் பொருட்களின் தரங்களையும் அவற்றின் மீதான கட்டுப்பாடுகளையும் கவனித்தாக வேண்டும். ஏனெனில் அங்கேதான் முன்னேறிய நாடுகள் தம் நிலைமையைக் காத்திரப்படுத்திக் கொள்ள ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சூட்சுமங்கள் துலங்கும். இங்கே, உயர் தொழில்நுட்ப உற்பத்திகளை முன்னேறிய நாடுகள் பலவித வழிகளைக் கையாண்டு கெட்டிப்பிடியாகக் கொண்டுள்ளதையும், நேற்றைய தொழில் நுட்ப உற்பத்திகளை குறிப்பாக கனரக பொருட்களின் உற்பத்தியைச் சிறிது சிறிதாக புதிதாக வளரும் நாடுகளுக்கு விட்டுக்கொடுத்து வருவதையும், மிகவும் கழிவுகளாக கருதப்படும் குறைந்த தொழில்நுட்ப பொருட்களான சப்பாத்துக்கள், துணிவகைகள், விளையாட்டுச் சாமான்கள் போன்றவற்றை பின்தங்கிய நாடுகளுக்கும் விட்டுள்ளதையும் அவதானிக்கலாம்.

நீண்ட காலமாக அமெரிக்க மூலதனத்திற்கும் அதன் இசைவுகளுக்கும் விட்டுக்கொடுத்தும், நம்பிக்கைக்கும், ஸ்திரத்திற்கும், வரவேற்பிற்கும் காத்திரமாக நடந்துகொள்ளும் தாய்வான், தென்கொரியா ஆகியவற்றால் கூட நடுத்தர அல்லது கீழ்த்தர தொழில் நுட்பத்திலிருந்து தாண்டி உயர் தொழில்நுட்ப உற்பத்திகளுக்கு செல்லமுடியவில்லை. அமெரிக்காவோ, ஜப்பானோ அதற்கான சந்தையையோ, தொழில்நுட்ப அறிவையோ வழங்கிவிடுவதாக இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உதாரணத்திற்கு தென்கொரியாவினது ஆகாயவெளி (Aerospace) உற்பத்திப் பிரவேசத்திற்கு முட்டுக்கட்டையாக இருக்கும் அமெரிக்கா.அதனை வெறும் அங்கங்களைத் தயாரிப்பதுடன் நின்றுவிடுமாறு வலியுறுத்தி வருவதிலிருந்து, ஒரளவு வளர்ந்த நாடுகளது நோக்கங்களைப் புரியலாம். இதேபோல தாய்வானினது உயர் தொழில் நுட்பத்திற்கு தாவிப் பாய்வதற்கான முயற்சி பெரும் விஞ்ஞான ஸ்தலங்களை (Science park) அமைத்தும் இலகுவான சட்டங்களை ஏற்படுத்தியும் அனுகப்பட்டபோதிலும் சாதனைகள் குறிப்பிடக்கூடியவையாக இல்லை. இத் தலங்களுக்கு வந்துசேர்ந்த 73 மேற்கத்திய நிறுவனங்களின் (பெருமளவில் இலத்திரனியல் சார்ந்தவை) உதவி பலவருடங்களின் பின்னர் தாய்வானைக் குலைக்கும், கத்தும், கிரீச்சிடும் விளையாட்டுப் பொருட்களுக்கான தொழில்நுட்பங்களையே வழங்கியுள்ளது.

## புதிதாய் வளரும் நாடுகளுள் இந்தியா, பிரேசில், மெக்சிகோ

இவை தவிர இந்தியாவும், பிரேசிலும் பெரும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தம்மை ஏற்படுத்திக் கொண்டு பயணம் செய்கின்றன என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு இரும்பு, உருக்கு, கப்பல் கட்டும் துறை, இயந்திரங்கள், உபகரணங்கள் ஆகிய கனரக உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்காக தம்மை முன்னேற்றியுள்ளமையே காரணமாகும். ஆனால் பிறேசிலினது குரல்வளையோ $115 பில்லியன் கடனால் நசுக்கப்படுவதுடன், நாட்டின் பணவீக்கம் வேறு 934% இருந்து பொருளாதாரத்தை ஸ்தம்பிதம் அடைய வைக்கின்றது. இந்தியாவிற்கு பாரிய கடன்தொல்லையோ, பணவீக்கத் தொல்லையோ இல்லாதுள்ளது. மேலும் புதிதாக வளரும் நாடுகளுள் கூடிய முன்னேற்றம் கொண்ட நாடாக இருப்பினும் இன்னமும்தான் Silicon சகாப்தத்துள் காலடி எடுத்து வைத்ததாக இல்லை.

கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்த வளர்ச்சியைக் காட்டும் மெக்சிக்கோவினது எதிர்காலமும் திடமானதாகக் காணப்படமுடியாது. ஏனெனில் இவ் வளர்ச்சிக்கு காரணமாக அமைவன பெற்றோலியம் கண்டுபிடிப்பும், அமெரிக்க எல்லைப்புறத்திலுள்ள பொருளாதார வளர்ச்சியுமாகும். இவ் எல்லைப்புற பொருளாதாரம் EPZ ஆக அமைந்து TV கள், குளிர்பதன சாதனங்கள் போன்ற மின்சார உற்பத்தியில் ஈடுபட்டிருப்பினும் அமெரிக்க மோட்டார் வண்டி உற்பத்திக்கும் அதனை விலைரீதியில் போட்டியில் வைத்திருப்பதற்காகவுமே ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு மெக்சிக்கோவின் மலிந்த தொழிலாளர் சந்தையே காரணமாகவும் தூண்டுதலாகவும் உள்ளது. "எமது நாட்டில் (USA) ஒரு தொழிலாளியினுடைய ஒரு மணி ஊதியம் $9 ஆக உள்ளபோது இங்கே 69 சதங்களாக உள்ளது. இதனால் General Motor Company சராசரி ஒரு தொழிலாளியில் $15,000 பணத்தினை வருடத்தில் சேமிக்கக்கூடியதாக உள்ளது. எமது மெக்சிக்கோ பொருளாதாரத்தின் ஈடுபாட்டிற்கான அடித்தளம் அதுவேதான். இதனால் ஜெனரல் மோட்டோர் கம்பனி ஜப்பானியரது உற்பத்திகளுடன் சந்தையில் போட்டியிடக்கூடிய தன்மையைப் பெறுகின்றது." இவ்வாறு Ren Maingot என்ற US தொழில்நிறுவனங்களின் சம்மேளனத்தின் அதிபர் ஒருவர் அறுதியாகக் கூறுவதிலிருந்து இப் பொருளாதாரத்தின் ஸ்திரத்தை ஒரளவு ஊகித்துக் கொள்ளலாம். மேலும் மெக்சிக்கோவினது $10.4 மில்லியன் கடனும், பொருளாதார வளர்ச்சியும்(1988) நிலைமையை நன்கு உணர்த்துவதுடன், இந்நாடு வளர்ந்த நாடுகளின் பட்டியலில் சேர்ந்துகொள்ளும் என்பதிலும் பார்க்க, பின்தங்கிய நாடுகளின் பட்டியலில் போய் சேர்ந்துவிடும் அபாயமே கூடுதலாக உள்ளதெனலாம்.

## புதிதாய் வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளுக்கு அச்சுறுத்தலாகுமா?

புதிதாக வளரும் நாடுகள் நேற்றைய தொழிற்துறைகளைக் கைப்பற்றிவிடுவதைக் கண்டு வளர்ந்த நாடுகள் கலங்கிவிடுவதில்லை. பிறேசில், மெக்சிக்கோ, தாய்வான், தென்கொரியா யாவுமே பாரிய அளவில் உருக்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளதுடன் பாரிய அளவில் எற்றுமதியும் செய்கின்றனர். மேற்கு ஐரோப்பிய நாடுகளின் 50% உருக்குத் தேவைகளை பிரேசில் மட்டும் கண்டங்காய்ப் பணத்தில் பூர்த்திசெய்கிறது. தென்கொரியா இன்று கப்பல் கட்டும் துறையில் ஜப்பானையும் முந்திவிட்டது. தாய்வான் மூன்றாவதாக வந்து சோந்துள்ளது. மேற்குறித்த சகல நாடுகளுமே மின்சாரப் பொருட்கள், போக்குவரத்துச் சாதனங்கள் என்பவற்றை பாரியளவில் உற்பத்தி செய்தும், ஏற்றுமதி செய்வனவாகவும் மாறியுள்ளன. ஒட்டுமொத்தமாக புதிதாக வளரும் நாடுகள் அத்தனையுமே நெசவு, துணி ஆடை உற்பத்தியினை கைப்பற்றியுள்ளதுடன் அதன் பொருளாதாரத்தில் தங்கியிருக்குமளவிற்கு வந்துள்ளன.

இப் போக்கினை ஊர்ஜிதம் செய்யும் வகையிலமைகிறது Nigel Haris எனும் அரசியல் பொருளாதார அவதானியினது பின்வரும் கூற்று. "1960 இல் மேற்கு நாடுகளது பங்கு உலக உற்பத்தியில் 71% ஆகவும் ஆக்க உற்பத்தியில் 78% ஆகவும் இருந்தது. 21 வருடங்களின் பின்னர், அது 60% ஆகவும் 59% ஆகவும் மாறியுள்ளது. உலக வங்கியின் கணிப்பின்படி இவை முறையே 50% ஆகவும் 50% ஆகவும் மாற்றப்பட்டுவிடும்."

இவ்வகையில் தொழில்மயப்படுத்துதல் என்பதை மட்டும் கொண்டு பார்க்கும் போது புதிதாக வளரும் நாடுகளில் பல குறிப்பாக தென் அமெரிக்க, ஆசிய நாடுகள் 20ம் நூற்றாண்டுக்குப் தாவிப் பாய்ந்துள்ளன என்பதில் ஐயமில்லை. ஆனால் இவ் வளர்ச்சி இவர்களை உலகச் சந்தையில் வளர்ந்த நாடுகளுடன் போட்டியிடத் தயார்படுத்திவிட்டன என்பதிற்கில்லை. ஏனெனில் வளர்ந்த நாடுகளோ பழைய போட்டிச் சந்தைகளை கைவிட்டுவிட்டு புதிதானவையை தமக்கென உருவாக்கிக் கொண்டுள்ளன. இலத்திரனியல் ,லேசர் தொழில் நுட்பங்களையும் அணு, உயிரியல் சக்திகளையும் செயற்கை மூலப்பொருட்களையும் உற்பத்திசெய்யும் உயர் தொழில் நுட்ப சந்தைகளை உருவாக்கிக் கொண்டுள்ளன. இந்த இடவெளி சுலபமாக நிரப்பப்படக்கூடியதல்ல.

மேலும், உள்ளூரா் உற்பத்தித் தொகை (Gross Domestic Products) என்ற அடிப்படையில் பார்க்கும் போது புதிதாக வளரும் நாடுகள், குறிப்பாக தென்கிழக்கு ஆசிய நாடுகள் பாரிய வளர்ச்சி கொண்டுள்ளன. ஆனால் இவ் வளர்ச்சி இந் நாட்டு மக்களை எவ்வகையில், எவ்வளவில் போய்ச் சேர்ந்துள்ளன என்பது கேள்விக்குறியே. காலாகாலமான அநியாயமான பஞ்சமும், பசிக்கொடுமையும், வழியெதுவுமற்ற விதியும், அடிமைத்தனமும் இவர்களை விட்டகல உதவியுள்ளனவா? இது வேறு விடயம். இதனை மறுபகுதியில் பார்ப்போம்.

(தொடரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

### சுவிஸ் நாட்டில் அரசியற் தஞ்சத்தைத் தீர்மானிக்க

# அடுத்த ஆண்டு முதல் புதிய ஏற்பாடு

ஜே.கேசவன்.

சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோருபவர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாக அவதானிக்கப் பட்டுள்ளது. இந்த வருடம் முதல் எட்டுமாதங்களிலும் சுவிசில் அகதிகள் அந்தஸ்து கோரியவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டைவிட 43% அதிகரித்துள்ளது. துருக்கி நாட்டவர்களே அரசியல் தஞ்சம் கோரியவர்களின் அதிகமானவர்களாவர். அதற்கு அடுத்தபடியாக இலங்கைத் தமிழர்கள் விளங்குகிறார்கள். இவற்றைவிட லெபனான், யூகோசிலாவியாவைச் சேர்ந்தவர்களும் கணிசமமான அளவு விண்ணப்பித்துள்ளனர். இம் மாதம் முதல் ருமேனியாவில் இருந்து அகதிகள் வரத்தொடங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சுவிஸ் அரசின் அகதிகளின் விவகாரங்களுக்குப் பொறுப்பாக விளங்கும் திரு பீற்றர் ஆர்பன்ஸ் அண்மையில் சுவிஸ் நாட்டு வெகுஜனத் தொடர்பு சாதனங்களுக்கு பேட்டியளிக்கையில் ஆகஸ்ட் மாத முடிவில் 48304 அகதிகள் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்துள்ளனர் எனவும் இந்தத் தொகை இந்த வருட முடிவில் இது மேலும் அதிகரித்துச் செல்லும் என்பதால் அவ்விண்ணப்பங்களை பரிசீலிப்பது கடினமானது ஆகும் என்றார்.

இதற்காக அடுத்த வருடம் முதல் புதிய முறை ஒன்றை கையாள உத்தேசித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுவிற்சலாந்தின் தலைநகரான பேர்ண் (BERN) நகரில் அரசியல் தஞ்சம் கோரிவந்த மக்களுடன் நீண்ட காலமாக பணியாற்றி வருபவர்களான திருவாளர்கள் றோலண்ட் (Aechlimann Roland), கிய்டோ(Koller Guido)என்பவர்களை நேரடியாகச் சந்தித்து சுவிஸ் தமிழ் அகதிகள்பற்றி உரையாடியபோது பெற்றுக் கொண்ட கருத்துக்களை இங்கு தருகின்றோம். இவர்கள் இருவரும் கிறிஸ்தவ சமாதான சபை- CFD (Christlische Friedens Dienst)என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள்.

**சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரிய தமிழ் மக்கள் பற்றிய விபரங்களைத் தெரிவிக்க முடியுமா?**

1984ம் ஆண்டில் இருந்து 1989ம் ஆண்டுவரை தஞ்சம் கோரிய தமிழ் மக்களின் எண்ணிக்கை சுமார் 6000 பேராகும். 1990ம் ஆண்டு இத்தொகை 14,000மாக அதிகரித்துள்ளது.

இவர்களில் 6000 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இதில் 250 பேருக்கு மட்டும் அரசியல் தஞ்ச அனுமதி வழங்கப் பட்டுள்ளது. 1500 பேரின் விண்ணப்பம் பரிசீலிக்கப் படாமலேயுள்ளது. தாமாகவே வேறுநாடுகளுக்குச் சென்றுள்ளதாலும், சுவிஸ் பெண்களைத் திருமணம் செய்திருப்பதாலும், சிறைச்சாலைகளில் சிறை வைக்கப்பட்டிருப்பதாலும் பரிசீலிக்கப் படவில்லை. மிகுதியான 8000 பேரினதும் விண்ணப்பங்களும் பரிசிலனைக்கு எடுக்கப்படாமலே உள்ளது.

**தமிழ் அகதிகள் சுவிஸ் நாட்டுக்குள் வந்ததும் அவர்கள் எப்படி பராமரிக்கப் படுகிறார்கள்?.**

இது ஒவ்வொரு கன்ரோனிலும் வேறுபட்டே காணப்படுகின்றது. சில அகதி முகாம்களில் இவர்களை மூன்று மாத காலம் வரை தங்க அனுமதித்து. 3 மாதத்திற்கு பின்னர் வேலை செய்ய அனுமதி வழங்கப்படுகின்றது. வேறு சில முகாம்களில் 6 மாதம் முதல் 8 மாத தாமதத்தின் பின்னரே வேலை செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள்.எந்தக் கன்ரோன்களிலும் அகதிகளாக வந்தவர்களை 3 மாதங்களுக்கு முன் வேலை செய்வதற்கு அனுமதிக்க வேண்டாம் என சுவிஸ் மத்திய அரசு பணித்துள்ளது. அகதி முகாம் சிலவற்றில் கிழமைக்கான, அல்லது மாதக்கிற்கான பணம் வழங்கப்படும். அப் பணத்தைக் கொண்டு பொருட்களை கொள்வனவு செய்து சமைத்துண்ண வேண்டும். வேறு சில முகாம்களில் உணவு வழங்கப் பட்டு கைச் செலவுக்கென சிறிதளவு பணம் வழங்கப் படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் சுவிஸ் பாராளு மன்றத்தில் நிறைவேற்றப் பட்ட மனிதாபிமான அடிப்படையில் நிரந்தர வேலைக்கு அனுமதித்தல் தீர்மானத்தின் படி 1984ம் ஆண்டுக்கு முன்னதாக சுவிஸ் நாட்டுக்குள் வந்தவர்களுக்கும், 1986ம் ஆண்டுக்கு முன் வந்து குழந்தைகளுடன் குடும்பமாக இருப்பவர்களுக்கும் இச் சலுகை வழங்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. இச் சலுகை தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு சிலருக்கு மட்டுமே வழங்கப் பட்டுள்ளது.

**சுவிஸ்நாட்டில் எமது மக்கள் செய்யும் தொழில்கள் பற்றி விபரிக்க முடியுமா?.**

தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் உணவு விடுதிகளிலும், உல்லாச விடுதிகளிலும் வேலை செய்கின்றனர். ஏனையோர் தொழிற்சாலைகளிலும், வியாபார நிலையங்களிலும், வயோதிபர் விடுதிகளிலும் வேலை செய்கின்றனர். இவர்களில் தொழிற்சாலைகளிலும், வியாபார நிலையங்களிலும், வயோதிபர் விடுதிகளிலும் வேலை செய்பவர்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸ் நாட்டில் அரசியல் தஞ்சம் கோரி....

சராசரியாக 2800 சுவிஸ் பிராங்குக்கு(SFr) மேற்பட்ட சம்பளமும், உணவு விடுதிகள், உல்லாச விடுதிகளில் வேலை செய்பவர்களுக்கு சராசரியாக 2000 SFr இற்கு மேற்பட்ட சம்பளமும் பெற்று வருகின்றனர். இத்துடன் கால அனுபவ அடிப்படையில் வேறுபட்ட சம்பளமும் பெற்று வருகின்றனர். 3 மாதங்களுக்கு முன்னர் அநேகமானோர் வேலை செய்யும் இடத்தில் குடும்பங்களுக்கான சலுகைப் பணம் பெற்று வந்தனர். நற்போது அகதிகளாக வந்து வேலை செய்பவர்களின் மனைவி குழந்தைகள் சுவிஸ் நாட்டில் இருந்தால் மட்டுமே இச்சலுகைப் பணம் பெறமுடியுமென அரசினால் தீர்மானம் இயற்றப் பட்டுள்ளது.

## சுவிஸில் உள்ள தமிழர்களில் வயது குறைந்தவர்கள் எப்படிப் பராமரிக்கப் படுகிறார்கள்?.

20 வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள். 16 வயது தொடக்கம் 20 வயது வரை உள்ளவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். 16 வயதுக்கு உட்பட்டவர்கள் கல்வி பயில பாடசாலை செல்ல அனுமதிக்கப் படுகிறார்கள்.

## சிறுவர் பராமரிப்பு எப்படி உள்ளது?.

சுவிஸ்லாந்தில் உறவினர்கள், பெற்றோர்கள் இல்லாத சிறுவர்களுக்கென சில கன்டோன்களில் அவர்களைப் பராமரிப்பதற்கென முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. உறவினர்கள் உள்ள சிறுவர்களை அவ் உறவினர்கள் பொறுப்பெடுக்கும் பட்சத்தில் அவர்களிடம் அனுப்பி வைக்கப் படுகின்றனர்.

## சுவிஸ் அரசு தமிழ் மக்களை எப்படி நோக்குகின்றது?

சுவிஸ் வந்த தமிழர்களை பொருளாதார அகதிகளாகவே சுவிஸ் அரசாங்கத்தினாலும், கூடுதலான சுவிஸ் மக்களாலும் நோக்கப்படுகின்றது. இருந்தாலும் இலங்கையில் ஏற்பட்டுள்ள யுத்தத்தினால் அங்கு அவர்கள் தற்சமயம் சென்று வாழமுடியாத நிலை உள்ளது என்றும், அங்கு சண்டை நின்றதும் தமிழர்களைத் திருப்பி அனுப்பலாமென்ற தீர்மானமே எடுக்கப்பட்டுள்ளது.

## தமிழர்கள் சிலர் திருப்பி அனுப்பப் பட்டதற்கான காரணம் என்ன?

வேறு ஐரோப்பிய நாடுகளில் அரசியல் தஞ்சம் கோரி விட்டு பின்னர் சுவிஸில் தஞ்சம் கோரியவர்களும், ஒரு கன்டோனில் விண்ணப்பித்துள்ளதுடன் வேறு ஒரு கன்டோனிலும் விண்ணப்பித்திருப்பவர்களும், சுவிஸ் சட்டதிட்டங்களை மீறியவர்களாக கருதப்படும் சிலரும் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர். உதாரணமாக சமூகத்திற்கு இடையூறு செய்பவர்கள், மது அருந்திவிட்டு மற்றவர்களுக்கு தொந்தரவு கொடுப்பவர்கள், வீதி, பொது இடங்களில் சேதம் ஏற்படுத்தும் வண்ணம் கைகலப்பில் ஈடுபட்டிருந்தவர்களும் குற்றவாளியாகக் கருதப்பட்டு நாட்டுக்குத் திருப்பியனுப்பப் பட்டுள்ளனர். குறிப்பாகப் போதை வஸ்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் சிலர் வெளியேற்றப் பட்டுள்ளார்கள். சிலர் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளார்கள்.

## தமிழர்கள் பற்றி திருவாளர்கள்றோலண்ட் (Rolland), கிய்டோ (Guido) ஆகிய இருவரின் கருத்துக்கள்.


திரு.றோலண்ட்: தமிழர்கள் சுவிஸ் மக்கள் எப்படி வாழ்கிறார்களோ அதே வழியில் சகல துறைகளிலும் இசைவாக்கம் அடைந்து வருகிறார்கள்.

திரு.கிய்டோ: தமிழர்களின் நிலைமை இங்கு கவலைக்குரியது. அவர்களது கல்வித் திறமைக்கேற்ப அந்தஸ்து சுவிஸில் வழங்கப்படுவதில்லை. தாய்நாட்டில் துன்பத்துக்குள்ளாகும் தமது மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் பற்றிய வேதனையுடன் எதிர்காலம் எப்படி அமையும் என்ற கேள்விக்குறியுடன் வாழ்கிறார்கள். சுவிஸ் அரசிற்கும் தமிழர்களுக்கும் இடையே நாம் பணி புரிவதால் தமிழர்கள் பொலிஸில் அரசியற் தஞ்சம் கோரும் போது தவறான தகவல்களையும், செய்திகளையும் கொடுப்பதனால் அரசியற் தஞ்சம் மறுக்கப்பட்டு பின்னர் எம்மிடம் வரும் போது எங்களுக்கும் உண்மையைச் சொல்லாததால் நாம் பெரிதும் சிரமத்துக்கு உள்ளாகி விடுகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நிழலுக்கு தசை போர்த்து...

- ஜி.எம்.பரம்சோதி -

எலும்பாகி
இத்துப் போகும்
மனித நேயம்
நிழலுக்கு தசை
கொடுக்கத் துடிக்கிறது.

விஞ்ஞான விதைகளின்
விளைச்சல்
மனித அறுவடையில்
இலாபத்தை தேடுகிறது.
பூமிப் பந்தில்
கீறிய கோட்டிற்குள்ளும்
அதை மீறியும்
புரிந்துணர்வுக்குள் சிக்காத
போர் மேக யாத்திரைகள்
யாருக்காக?

மனிதனை
மனிதன் அழித்துச் செல்லும்
வீரத்தின் விளம்பரம்
மனித நாகரீகத்தின்
எந்தப் பக்கத்தில்
நிரப்ப காத்திருக்கிறீர்கள்.
மூக்கை அமுக்கிவிட்டால்
மூச்சு நிற்கும் மனிதனுக்கு
மனிதனே
அணுக்குண்டு எதற்கு?

இங்கு
இன்னமும் எத்தனை
எதியோப்பியர்களையும்
கிரோசிமா நாகசாக்கிகளையும்
உருவாக்கப் போகின்றீர்கள்.
குருதிச் சமுத்திரத்தில்
நீந்தி வந்து
வெற்றிக் கொடி நாட்டும்
நாளைய மனிதனே!
உனது காலத்திலாவது
உன் தேசியக்கொடியில்
வெள்ளைப் புறாவை
பறக்க விடு.

எனது காலங்கள்
குருடானவை.
நீதிகூட நியாயத்திற்காக
வக்கீல் வைக்கும் காலம்
புத்தனின் போதனையால்
இங்கு
யுத்தத்தை விட்டவன்
அசோகன் மட்டும்தான்.
யுத்தம் நிற்கவேயில்லை.

நியூற்றன்கள்,
நியூக்கிலியர்,
நேபாம்கள் மத்தியில்
மனிதன் இருப்புக்கு
யாரிடம் கேட்பது
உத்தரவாதம்.
எம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கும்
மேகங்களுக்கு என்ன பேயர்
தெரியுமா?
அமில மேகம்
இனறு சிரித்திருக்கும்
சின்னப் பூக்களெல்லாம்
நாளை சிவப்பாய் கிடக்கும்
இப்பூமி எங்கும் சிதறி.
எலும்புக்கு சதை கொடுக்காமல்
நிழலுக்கு சதை கொடுக்கும்
மனிதனே!
இதில் நீயும் அடங்குவாய்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்